Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 26, 2021

வெள்ளிக்கிழமை நவம்பர் 26, 2021 | ஒளி: 07 கதிர்: 163 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



## மாவீரர்களுக்கு மலரஞ்சலி

■ எஸ். நிதர்ஷன், எம்.றொசாந்த்

மாவீரர் வாரத்தை முன்னிட்டு, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், நேற்று (26), மலரஞ்சலி செலுத்தி, முழந்தாளில் இருந்து, வீரமறவர்களுக்கு தமது ஆத்மார்த்தமான அஞ்சலி செலுத்தினர்.

குறிப்பாக, பல்கலைக்கழகச் சூழலில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இராணுவம், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும், மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

# கிண்ணியா நகர சபை தவிசாளருக்கு விளக்கமறியல்

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் படகுப் பாதை கவிழ்ந்து 6 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட கிண்ணியா நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம் நளீம், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று (25) மாலை கைது செய்யப்பட்ட அவரை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. படகு சேவைக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கூறியும், அனுமதி வழங்கிய கிண்ணியா நகர சபையே இந்த விபத்துக்கு முதலாவது பொறுப்புக்கூற வேண்டும் எனவும் கிண்ணியா மேயரின் செயற்பாடுகளே இந்த விபத்துக்குக் காரணம் எனவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## எமது சிலிண்டர்கள் தரமானவை

### குற்றச்சாட்டை மறுக்கிறது லிட்ரோ: கொட்டாவை வீட்டில் வெடிப்பு



அண்மைய நாள்களில் தயாரிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் எரிவாயு சிலிண்டர்களின் தரத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் சமூக வலைதளங்களில் பரவி வரும் பல்வேறு செய்தி மற்றும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றும் லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# "எனது அடி வேறு மாதிரி இருக்கும்"



**சபையில் மைத்திரி காட்டம்**

**மூன்றிலிரண்டு எங்களின் கைகளில்**

**பங்காளிகளை பகைத்தால் ஆட்சி கவிழும்**

**முன்னாள் ஜனாதிபதியை பற்றி பேசவா?**

**மஹிந்தானந்தவின் வாயே நெருக்கடிகளுக்குக் காரணம்**

■ பா.நிரோஸ்

"சண்டைக்கு அழைக்கிறீர்கள். சண்டைக்கு நானும் தயார். ஆனால், எனது அடி வேறு மாதிரியாக இருக்கும். எங்கெல்லாம் காயம் படும் என்பது தெரியாது என்பதை சொல்லி வைக்க விரும்புகிறேன். பங்காளிகளை பகைத்த ஆட்சிகள் கவிழ்ந்துள்ளன. எனவே பங்காளிகளைப் பகைக்காதீர்கள்" என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை சுதந்திரக் கட்சியிடமே இருப்பதாகவும் அதிரடி காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதியின் செலவீனங்கள் தொடர்பான அமைச்சர் மஹிந்தானந்தவின் உரையால் ஆத்திரமடைந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி, மஹிந்தானந்தவுக்கு கடுந்தொனியில் பதிலளித்ததால் சபையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தொடர்ச்சி P2

விசாரணை தீவிரப்படுத்தப்பட்டு

## குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

### கிழக்கின் அனைத்துப் பாலங்களின் தரம் குறித்து ஆராய விசேட குழு

### கிழக்கு மாகாண ஆளுநர் உறுதி

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



"குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்துச் சம்பவத்தில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம்" எனத் தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், "பொறுப்பில் இருந்து யாரும் தப்ப முடியாது" என்றார்.

தொடர்ச்சி P2



கிண்ணியாவில்

## துக்க தினம் அனுஷ்டிப்பு

■ ஹஸ்பர் ஏ ஹலீம், எப்.முபாரக்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபங்களைத் தெரிவிக்கும் முகமாக, சிவில் சமூகம் இணைந்து கடைகள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, கிண்ணியாவில் நேற்று (25) துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

ஒற்றுமை இல்லையேல் கிழக்கில்

## சிங்கள மக்களின் ஆதிக்கம் அதிகரிக்கும்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்




கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் இஸ்லாமியர்களும் ஒற்றுமையாக செயற்படாவிடின், எதிர்காலத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துவிடும் என்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இலங்கை மின்சார சபையின்

## பொறியியலாளர்கள் சங்கம் வேலை நிறுத்தம்

### இ.மி.ச பொது முகாமையாளரால் எச்சரிக்கைக் கடிதம்



பல கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம், நேற்று (25) நண்பகல் முதல் தொழிற்சங்கப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளதுடன், பொறியாளர்கள் காலை 08:30 முதல் மாலை 4:15 மணி வரை மட்டுமே பணிக்கு வருவார்கள் என்றும் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## குறிஞ்சாக்கேணியில் இலவச படகுச் சேவை

### இலங்கை கடற்படை ஆரம்பித்தது



■ எப்.முபாரக்

திருகோணமலை - கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தின் ஆற்றைக் கடப்பதற்கு இலங்கை கடற்படையினரால் இலவச படகு சேவை, நேற்று (25) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப்பணி நடைபெற்று வரும் நிலையில், அவ் ஆற்றைக் கடந்து செல்வதற்காகக் கிண்ணியா நகர சபையால் தனியார் ஒருவருக்கு இழுவை படகு மூலம் கட்டணம் செலுத்தி, படகு சேவை நடைபெற்றிருந்தது.

தொடர்ச்சி P2



## சபைக்குள் சஜித் அணி; கடுமையாக வலியுறுத்து

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நேற்றாகும் (25). இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இல்லாத வலுவான தேசத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தக் கோரியும் சபைக்குள் வித்தியாசமான போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தடை உத்தரவுக்கு எதிராக

## மேன்முறையீடு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



மாவீரர் தின நிகழ்வுகளுக்கு, கிளிநொச்சி நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த தடை உத்தரவுக்கு எதிராக, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் மேல்முறையீட்டு நகர்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## செல்லவும் மாட்டோம்; போகவும் மாட்டோம்



அவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினராகிய நாங்கள், மொட்டு கட்சிக்கு செல்லவில்லை. அதேபோல, அரசாங்கத்தை விட்டு போய்விடுங்கள் என்றாலும் போகவும் மாட்டோமெனத் தெரிவித்துள்ள சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பின் பேரிலேயே அக்கட்சியுடன் இணைந்து, ஜனாதிபதி தேர்தலில் இணைந்து வேலைச் செய்தோம் என்றார்.

தொடர்ச்சி P2

ராஜபக்ஷர்களின் ஆட்சியிலேயே

## பெண்கள் மீதான துஷ்பிரயோகம் அதிகம்



அன்று தொடக்கம் இன்று நாட்டில் ஆட்சியமைத்த அரசாங்கங்களுள், விசேடமாக ராஜபக்ஷர்களின் அரசாங்கத்தில் தான் பெண்களுக்கு எதிராக அதிக துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, விசேடமாக உள ரீதியான, வாய்மொழி மூலமான, உடல் ரீதியான துஷ்பிரயோகங்கள் என, ஏதோ ஒருவகையில் கொடுமைகள் இடம்பெற்று வருகின்றன என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்த தெரிவித்த அவர், "இதற்கான உதாரணங்கள் எம்மிடம் உள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் என எம்மிடம் பல உதாரணங்கள் உள்ளன.

"நகர சபைகளில் உடல் ரீதியான துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.

தொடர்ச்சி P2

மைத்திரியை சீண்டுவதை பொறுக்க முடியாது

## விளைவுகள் மோசமாகுமென கடுமையான எச்சரிக்கை

■ பா.நிரோஸ்

"ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மீதான, ஆளுந்தரப்பினரின் தொடர் சேறுபூசல்களை இனியும் பொறுத்துகொள்ள முடியாது" எனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர, "மயில்போல் ஆடும் மஹிந்தானந்தவின் பேச்சை குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், விளைவுகள் மோசமாக இருக்கும்" எனவும் கடுந்தொனியில் எச்சரித்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கிண்ண்ணியா நகர சபை தவிசாளருக்கு விளக்கமறியல்

மேலும், படகுச் சேவையை முன்னெடுப்பதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் கிண்ணியா நகரசபைக்கு இல்லை என்றும் இல்லாத அதிகாரத்தைப் பயன்படுத்தி படகு சேவைக்கு அனுமதியை வழங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. செவ்வாய்க்கிழமை (23) காலை இடம்பெற்ற இவ்வனர்த்தத்தில், மாணவர்கள் உட்பட அறுவர் மரணமடைந்ததுடன், 20 பேர் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எமது சிலிண்டர்கள் தரமானவை

சமீபத்தில் பல எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான செய்திகளை அடுத்து, எரிவாயு சிலிண்டர்களின் கலவை மாற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன கேள்வி எழுப்பியிருந்தார்.

லிட்ரோ கேஸ் மற்றும் லாஃப்ஸ் கேஸ் ஆகியவற்றுக்கு இடையே லாபம் மற்றும் கூட்டுறவை அதிகரிக்க அதன் பியூட்டேன்-புரோபேன் கலவையில் ஏற்பட்ட அபாயகரமான மாற்றத்தைத் தொடர்ந்து, வாயு வால்வுகளில் கசிவு ஏற்படுவதாக குணவர்தன எச்சரித்தார்.

எவ்வாறாயினும், லிட்ரோ கேஸ் லங்காவின் வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஜானக பத்திரத்ன, அத்தகைய கூற்றுக்களை மறுத்துள்ளதுடன், எரிவாயுவின் தரத்தில் எந்த பிரச்சனையும் இல்லை என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பாக தற்போது சமூக வலைதளங்களில் பரவி வரும் பல்வேறு செய்தி மற்றும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றும், அவை பொதுமக்களை பயமுறுத்தும் வகையிலும், நிறுவனத்துக்கும், அரசாங்கத்துக்கும் இடையூறு விளைவிக்கும் வகையிலும் பரப்பப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுமார் 6 மில்லியன் வீட்டு எரிவாயு சிலிண்டர்கள், பொதுமக்கள் வசம் இருப்பதாகத் தெரிவித்த ஜனக பத்திரத்ன, அனைத்து எரிவாயு சிலிண்டர்களும் தேசிய தர நியமங்களுக்கு அமைவாக விநியோகிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பன்னிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டாவையில் உள்ள வீடொன்றில் நேற்று (25) காஸ் சிலிண்டர் வெடித்துச் சிதறியது. சமையலறை மற்றும் ஏனை அறைகளில் சிறிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அச்சந்தர்ப்பத்தில் வீட்டில் யாரும் இருக்கவில்லை. அதனால், உயிர்ச் சேதங்களோ, காயங்களோ ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ‘எனது அடி வேறு மாதிரி இருக்கும்’



2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய மைத்திரி பால சிறிசேன எம்.பி,

“நான் வசிக்கும் வீடு தொடர்பில் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சுமத்தியிருந்தார். எனினும், குற்றசாட்டுக்களை நிரூபிக்கக் கோரியிருந்தேன். இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை. அதுபொய்” என்றார்.

நான் ஜனாதிபதியாக இருந்தபோது 200 வாகனங்களை நான் பயன்படுத்தினேன் எனவும், ஜனாதிபதி செயலகத்தின் வருடாந்த செலவு 3.5 பில்லியனாக இருந்தது எனவும் குற்றம் சுமத்துகிறார்கள். இது அப்பட்டமான பொய். எனக்கு நான்கு வாகனங்களே வழங்கப்பட்டிருந்தன. கடந்த வருடம் (2020) ஆம் ஆண்டு தற்போதைய ஜனாதிபதியின் வருடாந்த செலவீனமாக 1.5 பில்லியன் காணப்படுகிறது. அதனை எனது செலவீனங்களுடன் இணைத்து, நான் பாரியளவான நிதியை செலவிட்டதாக பொய் சொல்கிறார்கள் என சுட்டிக்காட்டினார்.

“எனது ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் பிரதானமாக 7 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்த வேலைத்திட்டங்கள் இப்போது முன்னெடுக்கப்படுவதில்லை. அந்த வேலைத்திட்டங்களுக்கே குறித்த நிதி செலவிடப்பட்டது. நான் ஆளுங்கட்சி உறுப்பினராக இருக்கிறேன். இவ்வாறான நிலையில் ஆளுங்கட்சியில் இருப்பவர்களே எனக்கு சேறுபூசுவது தவறானது.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தின் பங்காளியாக இருக்கும்போது, அக்கட்சியின் தலைவருக்கு ஆளுந்தரப்பினரே சேறுபூசுவது நல்லதல்ல. இது தொடரக்கூடாது எனவும் எச்சரித்தார்.

மேலும், “முன்னாள் ஜனாதிபதி என்கிற ரீதியில் முன்னாள் ஜனாதிபதியை செலவீனங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் உரிமை எனக்கு இருக்கிறது. என்னால் சண்டையிட முடியாது. நான் அஹிம்சையானவன். ஆனால், யாராவது என்னை தாக்கினால். நானும் திருப்பி தாக்குவேன். எனது தாக்குதல் வேறுமாதிரியாக இருக்கும். சண்டைக்கு தயார் என்கிறார்கள். நாங்கள் அடித்தால் எங்கெல்லாம் காயம் படும் என்பதைச் சொல்ல முடியாது” எனவும் கடுந்தொனியில் எடுத்துரைத்தார்.

முன்னாள் ஜனாதிபதிகள் எவ்வாறு செலவீனங்கள் செய்தார்கள் என்பதை என்னாலும் கூற முடியும். ஆனால், கண்ணாடிக்குள் இருந்து கல்வீசத் தயாரில்லை எனவும், கடந்த கால அரசாங்கங்களில் இருந்த பங்காளிகள் எவ்வாறு அந்த அரசாங்கத்தை விட்டு வெளியேறினார்கள், பங்காளிகள் வெளியேறியதால் ஆட்சி எவ்வாறு கவிழ்ந்தன என்பதையும் மைத்திரி சபையில் சுட்டிக்காட்டினார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை அரசாங்கத்துக்கு இருக்கிறது என்கிறார்கள். உண்மையில் அரசாங்கத்தின் பங்காளியான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்களின் கைகளிலேயே தற்போதைய அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருக்கிறது எனவும் சாடினார்.

அரசாங்கத்துக்கு சண்டையிடுவதால் என்ன நடக்கும் என்பது கடந்த காலங்களில் நாம் பார்த்தோம். தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் கூட்டணி அரசாங்கம். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் அதன் பங்காளிக் கட்சிகள் 12 இணைந்து உருவாக்கிய கூட்டணி அரசாங்கமே இது. அரசாங்கத்துக்குள் முரண்பாடுகள் வந்தால், என்ன நடக்கும் என்பதற்குப் பல முன்னுதாரணங்கள் உள்ளன எனவும் கூறினார்.

மஹிந்தானந்த தனது தலைவரான ஜனாதிபதியை உசுப்பேற்றும் வகையில் எதனையும் கூறினால் எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், எங்களை தாக்க வர வேண்டாம். அரசாங்கத்துக்குள் இருந்து சண்டையிட கூடாது எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியிடம், அமைச்சரவையிடம், பாராளுமன்றத்திடம், மக்களிடத்தில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பொய் கூறினார். அரசாங்கம் பாரதூரமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருவதற்கு மஹிந்தானந்தவே காரணம். மஹிந்தானந்தவின் உருவ பொம்மையை அவரே எரித்துக் கொள்கிறார் எனவும் தெரிவித்தார்.

ஆதாரங்கள் இருப்பதாக தொடர்ந்து மஹிந்தானந்த அளுத்கமக கூறுகிறார். ஆதாரங்கள் இருந்தால் அதனை வெளியிட வேண்டும் எனவும் மைத்திரி சவால் விடுத்தார்.

# மாவீரர்களுக்கு மலரஞ்சலி

இருப்பினும், இராணுவ கெடுபிடிகள் , கண்காணிப்புக்களை மீறி, மாணவர்கள் ஆத்மார்த்தமான முறையில் தமது அஞ்சலிகளை செலுத்தினர். மாவீரர் வாரம் அனுஷ்ட்டிக்கப்பட்டு வரும் நிலையில், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு, அவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தடையுத்தரவுகளை பெற்றுள்ளனர்.

இதேவேளை, கடந்த சில நாள்களாகவே யாழ். பல்கலைக்கழக சூழலில், துப்பாக்கிகளுடன் இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்டு, பல்கலைக்கழக சூழலின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டதுடன், கண்காணிப்பும் தீவிரமாக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் தற்போது செயற்படும் அனைத்துப் பாலங்களின் தரம் குறித்து ஆராய விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

பொலிஸ், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் பிரிவு மற்றும் கடற்படையினரால் இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகு விபத்தின் போது பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் காயமடைந்தவர்களை பார்ப்பதற்காக கிண்ணியா தள வைத்தியசாலைக்கு நேற்று (25) காலை சென்ற போதே, ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், “இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க நாம் அனைவரும் உறுதி எடுக்க வேண்டும். ஒருவரையொருவர் நோக்கி விரல் நீட்டும் நேரம் இதுவல்ல. “போருக்குப் பின்னர், இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான பாலங்கள் கிழக்கு மாகாணத்தில் கட்டப்பட்டன. எனினும், குறிஞ்சாக்கேணியில் பாலம் கட்டும் பணி கொவிட் தொற்றால் தாமதமானது. மாற்று வழி இருந்தபோதிலும், மக்கள் அதைப் பயன்படுத்த விரும்பவில்லை.

“இந்தச் சம்பவத்தை தொடர்பில் நாங்கள் இப்போது விசாரித்து வருகின்றோம். விசாரணை அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம். “தற்போது பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் கடற்படையினரால் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்தப் பாலத்தின் பணிகளை விரைவில் முடிக்க அரசு கவனம் செலுத்தி வருகிறது” என்றார்.

# குறிஞ்சாக்கேணியில் இலவச...

இந்நிலையில், அப்படகு செவ்வாய்கிழமை (23) பாடசாலை மாணவர்கள் உட்படப் பலருடன் பயணித்த நிலையில், விபத்திக்குள்ளாகி பாடசாலை மாணவர்கள் உட்பட 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதனால் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் பணிப்புரைக்கமைய விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக் கடற்படையின் படகு சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட படகில் ஆகக்கூடிய தொகையாக 25 பேர் வரை பயணிக்க முடியும் எனவும் பயணிகள் அனைவருக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் தனித் தனியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படகு சேவை, திருகோணமலை கடற்படையினரால் மேற்பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# துக்க தினம் அனுஷ்டிப்பு

இதன்போது, பிரதான வீதிகள், கடைகள், அரச திணைக்களங்கள், வங்கிகள், வணக்கஸ்தளங்கள் மற்றும் வீடுகள் என பல இடங்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

உயிரிழந்த நான்கு மாணவர்கள் உட்பட 6 உயிரிழப்புக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை மக்கள் தெரிவித்தனர்.

முள்ளிப்பொத்தானை கோட்ட பாடசாலைகளிலும் பாடசாலை இடம்பெறாமல் வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்டு, நேற்றையதினம் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

# மேன்முறையீடு

இதற்கமைய, இன்றைய தினம் (26), குறித்த மேல்முறையீட்டு நகர்தல் பத்திரம் மீதான விசாரணை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 19ஆம் திகதியன்று, கிளிநொச்சி நீதிமன்றத்தில், மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸாரால், 51 பேருக்கான தடையுத்தரவு பெறப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், விசுவமடு, முழங்காவில் ஆகிய பகுதிகளில் மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்படுவதுடன், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்துக்கும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பொலிஸாரால் தடையுத்தரவு பெறப்பட்டிருந்தது. குறித்த துயிலுமில்லங்களில் கடந்த 2017, 2018ஆம் ஆண்டுகளில், மாவீரர் நாள் நினைவேந்தல்கள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# சிங்கள மக்களின்...

கனடா வாழ் இலங்கை முஸ்லிம் சமூகத்தினரை நேற்று முன்தினம் (24) கனடாவில் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், “உண்மையிலேயே என்னைப் பொறுத்தவரை, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அனைத்து சமூகங்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஒருவராகவே நான் என்னைப் பார்க்கின்றேன்.

“இவர் என்ன எங்களுடைய பிரச்சனைகளை கதைக்கின்றார். எங்களுக்காக பேசுகின்றார் என்று சில இஸ்லாமிய அரசியல்வாதிகள் மத்தியில் கருத்து ஒன்று உள்ளது. எனினும், நான் அனைத்து பிரச்சனைகளுக்காகவும் குரல் கொடுகின்றேன்.

“அதிலே இஸ்லாமிய சகோதரர்கள் மத்தியிலேயே அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் போது எங்களை பாராட்டுவதனை விடவும், இஸ்லாமியர்களுடைய பாராட்டுக்கள் அதிகமாக வருகின்றது.

“எனக்கு முன்னர் உரையாற்றிய ஒருவர் சொன்னார், நாங்கள் அவர்களுக்கு வாக்களிக்கப்போவதில்லை என்று. அது உண்மைதான். என்னை பொறுத்தவரையில் நான் அந்த வாக்குகளை எதிர்பார்த்து எதனையும் செய்யவில்லை“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பொறியியலாளர்கள்...

எனினும், மின் துண்டிப்பு, அவசர நடவடிக்கையின்போது, வேலை நேரத்துக்கு மேலதிகமாக கடமைக்கு வருவதாக சங்கம் அறிவித்துள்ளது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், தமது தொழிற்சங்க நடவடிக்கை தீவிரமடையும் எனவும் சங்கம் வெளியிட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பல தனிநபர்களின் இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு எந்த அடிப்படையும் சரியான நியாயமும் இல்லை என்று இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர்.ரணதுங்க தெரிவித்தார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை திறம்பட சரியான நேரத்தில் அமல்படுத்துவது அரசாங்கத்தின் முன்னுரிமை என்று இலங்கை மின்சார சபையின் அனைத்து மேலதிக பொது முகாமையாளர்களுக்கும் ரணதுங்க அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தொழிற்சங்க நடவடிக்கையில் கலந்து கொள்ள உத்தேசித்துள்ள திட்டப்பணிகளில் உள்ள அலுவலர்கள், திட்டப் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில், மேலதிக பொது முகாமையாளர்களுக்கு தனித்தனியாக முன் அறிவிப்பை வழங்க வேண்டும்.

அத்தகைய இடையூறு ஏற்பட்டால், ஒப்பந்ததாரர்கள் அல்லது மின்சார சபையின் ஏதேனும் மூன்றாம் தரப்பினர் அல்லது அரசாங்கத்திலிருந்து செய்யப்பட்ட பணப்புழக்கம் அல்லது உரிமைகோரல்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும்என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மேற்கூறிய பிரசாரத்தின் ஒரு பகுதியாக பிற்பகல் 4.15 க்கு பின்னர், பணிபுரியாத எந்தவோர் அதிகாரிக்கும் கொடுப்பனவு வசதியைப் பயன்படுத்துவதற்கு உரிமை இல்லை என்றும் முகாமையாளரின் கடிதத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

# செல்லவும் மாட்டோம்...

கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணக்கப்பாடு ஏற்பட்டதன் பின்னரே மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. அவ்விணக்கப்பாடு, ஒப்பந்தம் ஆகியவற்றுக்குப் பின்னரே, ஜனாதிபதி, பொதுத் தேர்தலில் இணைந்து செயல்பட்டோம். இதனால், பொதுத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறமுடிந்தது என்றார்.

இன்று ஆளும் கட்சியில் இருந்து கொண்டு எம்மை விமர்சிப்பவர்கள், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் தோல்விக்கு காரணமானவர்களாக இருந்தனர். எனவே, மீண்டும் அவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்தவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலக்கும் நோக்கிலேயே அவர்கள் இவ்வாறு செயற்படுகிறார்கள் என எண்ணத் தோன்றுகின்றது என்றார். ஜனாதிபதிக்கு தலைகுணிவை ஏற்படுத்தவும் அழுத்தத்தை ஏற்படுத்தவுமே இவ்வாறு செயற்படுகிறார்கள் என்றார்.

# விளைவுகள் மோசமாகுமென...

பாராளுமன்றத்தின் நேற்றைய (25) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது ஆட்சிக் காலத்தில் 3.5 பில்லியன் ரூபாயை செலவிட்டதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பல நல்ல அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த நிதி செலவிடப்பட்டுள்ளதாக தெரிவித்து அந்த வேலைத்திட்டங்களையும், அதற்கான செலவுகளையும் கூறிய தயாசிறி, 3.5 பில்லியன் ரூபாய்களை மைத்திரிபால சிறிசேன நாசமாக்கவில்லை.

மைத்திரி 200 வாகனங்களை பயன்படுத்தினார் என மஹிந்தானந்த கூறும்போது, அமைச்சர் ரோஹித 350 வாகனங்களை மைத்திரி பயன்படுத்தினார் என்கிறார். இதில் எது உண்மை? எனவும் அவர் வினவினார்.

மஹிந்தானந்த அளுத்கமகே, மைத்திரி மீது ஒரு தடவை, இரு தடவை சேறுபூசினால் பரவாயில்லை நாம் பொறுத்துகொண்டு இருப்போம். எனினும் 14 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மீது தொடர்ந்து சேறுபூசுவதை எங்களால் பொறுத்துகொள்ள முடியாது. அளுத்கமகே, மயிலை போல தேகை விரித்தாடுகிறார். ஆனால் மயிலின் பின்புறம் வெளியில் இருக்கிறது என்பதை அவர் மறந்துவிடக்கூடாது. நாம் அரசாங்கத்தின் பங்காளிக்கட்சி என்றவகையில் ஒவ்வொரு தடவையும் அரசாங்கத்தை பாதுகாத்து வருகிறோம் என்றார்.

# ‘பெண்கள் மீதான துஷ்பிரயோகம் அதிகம்’

இவ்வாறான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதனுடன் தொடர்புடைய பிரதான நபர், பொதுஜன பெரமுனவின் உறுப்பினராகவே இருப்பார். ஆனால், எமது ஆட்சியில் தான் முதற்தடவையாக அதிகமான பெண்கள் அரசியலுக்கு வரும் 25 சதவீத ஒதுக்கீட்டை பெண்களுக்கு வழங்கினோம்.

“ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாவின் வெற்றிக்காக அதிகம் வீதிக்கு இறங்கியவர்கள் பெண்கள். ஆனால், இன்று அந்த பெண்களின் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது.

“ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஆண் என்பவன் கடுமையான தொனியில் கதைக்க வேண்டும் என, ஆசிய நாடுகளில் ஆண்கள் தொடர்பில் பெண்களின் சிந்தனை உள்ளது.

“வயிற்றையும் மார்பையும் வெளியே தள்ளிக்கொண்டு இருந்தால் அவர் சிறந்த ஆண் மகன் என பெரும்பான்மையான பெண்கள் நினைக்கின்றனர். அவ்வாறு சிந்தித்துத் தான் மஹிந்த, கோட்டாபய உள்ளிட்டவர்களை ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். பெண்களுக்கு எதிராக எவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டாலும் சட்ட நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் எனத் தெரியும். எப்போதும் பெண்களை மதிக்காதவர்களையே இவர்கள் உறுப்பினர்களாகத் தெரிவு செய்வர் என தெரிந்தும் பெண்கள் அவர்களுக்கே வாக்களிக்கின்றனர்” என்றார்.

குட்டியாராச்சிக்கு

# தண்டனை வழங்க வேண்டும்

## சபையில் சஜித் அணி எச்சரிக்கை

பா.நிரோஸ்

ஐக்கிய மக்கள் சக்தியின் பெண் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன உள்ளிட்ட பெண்களை அவமதிக்கும் வகையிலும் கருத்துக்களை தெரிவித்ததாக குற்றம்சாட்டப்படும் ஆளுங்கட்சி எம்.பி திஸ்ஸ குட்டியாராச்சிக்கு, சபாநாயகர் நிச்சியமாக தண்டனை வழங்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.



சபாநாயகர் திஸ்ஸ குட்டியாராச்சி தண்டனை வழங்கவில்லை என்றால், இந்த விடயத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்வோம் எனவும் சபையில் சஜித் அணி எச்சரித்தனர்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவே சபாநாயகரிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், திஸ்ஸ குட்டியாராச்சியின் மோசமான செயற்பாடுகள் தொடர்பில் சபாநாயகர் கண்டனத்தை தெரிவித்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால், அவருக்கு ஏதாவதுவொரு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எனது 32 வருட பாராளுமன்ற அனுபவத்தில் இதுபோன்ற வார்த்தைகளை நான் கேட்டதில்லை. பிரித்தானிய பாராளுமன்றத்தில் இதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் கூறினார். பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு தினம் இன்று உலகளவில் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை வலியுறுத்தும் வகையிலேயே நாம் எமது கைகளில் மஞ்சள் நிற பட்டியை அணிந்திருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

இந்த அதியுயர் சபையில் வாய்மூல பாலியல் துன்புறுத்தல்கள் முன்னெடுக்கப்படுவது உண்மையில் வெட்கத்துக்குரியது.

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# இருநாள் விவாதம் வேண்டும்

பா.நிரோஸ்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீது இருநாள் விவாதம் வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுசெயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கேட்டுக்கொண்டார்.



பாராளுமன்றத்தின் நேற்றைய (25) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருந்தபோது அரச புலனாய்வாளர்களிடமிருந்து சஹ்ரான் தொடர்பில் எனக்குக் தகவல் கிடைத்திருந்தது. இது தொடர்பில் அப்போதிருந்த சி.ஐ.டியின் பணிப்பாளர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருடன் கலந்துரையாடி, சஹ்ரானை கைது செய்ய நடவடிக்கை எடுத்திருந்தோம் என்றார்.

சஹ்ரானை கைது செய்ய நாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறார்கள். நாம் உரிய நடவடிக்கையை எடுத்திருந்தோம். எனினும் 54 நாள்கள் ஆட்சிக் கவிழ்ப்பின்போது எனது அமைச்சு பறிக்கப்பட்டது. அதன் பின்னர் எனக்கு அந்த அமைச்சு கிடைக்கவில்லை என்றார்.

இந்த நிலையிலேயே அப்போதிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் கொலை செய்யத் திட்டமிடப்படுகிறதாக நாமல் குமார என்பவர் சதி செய்தார். இதனால் சி.ஐ.டியின் பணிப்பாளராக இருந்த ஷானி அபேசேகர, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக இருந்தவரையும் கைது செய்து விளக்கமறியிலில் வைத்தார்கள்.

சஹ்ரான் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். நாமல் குமார் இப்போது எங்கே? அவர் கூறிய விடயங்கள் என்னவானது? சட்டம், ஒழுங்கு அமைச்சராக இருந்போது அரச புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் புலனாய்வு அறிக்கைகள் பலவற்றை எனக்கு வழங்காது மறைத்துள்ளார். ஏன் இதனை அவர் செய்தார்?

இதேவேளை அரசாங்கத்தின் சார்பில் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஷா, ஆளுங்கட்சியும் இந்த விவாதத்துக்கு தயாராகவே இருக்கிறது. விவாதிப்போம் எனவும் கூறினார்.

# ‘வானொலி அரச விருது’



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப்.எம். அறிவிப்பாளரும் ஆசிரியரும் கவிஞரும் எழுத்தாளருமான ஜே. வஹாப்தீன் வானொலி அரச விருது பெற்றார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வானொலி அரச விருது விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பிறை எப்.எம். மூன்று விருதுகளைப் பெற்றுள்ளது.

அறிவிப்பாளர் ஜே.வஹாப்தீன் பிரதியாக்கத்துக்கான வானொலி தேசிய அரசு விருதையும், சிறந்த நடிகருக்கான சிறப்பு பரிசையும், அறிவிப்பாளர் எம்.ஏ. ரமீஸ் கலந்துரையாடலுக்கான விருதையும் பெற்றுள்ளார்.

**அறிவிப்பாளர் ஜே.வஹாப்தீன் பிரதியாக்கத்துக்கான வானொலி தேசிய அரசு விருதையும், சிறந்த நடிகருக்கான சிறப்பு பரிசையும், அறிவிப்பாளர் எம்.ஏ. ரமீஸ் கலந்துரையாடலுக்கான விருதையும் பெற்றுள்ளார்**

வஹாப்தீன், தனது கலை, இலக்கியத் துறைக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவர் எழுதியுள்ள நாவல்களான ‘கலவன் கட்டிகள்’, ‘குலைமுறிசல்’, ‘தோறாப்பாடு’ ஆகிய நாவல்களுக்கு ‘பெயாவே’ தேசிய விருதுகளும், கிழக்கு மாகாண சாஹித்திய விருதுகளையும் பெற்றுள்ளார். அத்தோடு, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இளங்கலைஞர் விருதும் பெற்றவர். அரச ஊழியர்களுக்கான தேசிய போட்டிகளில் பல முறை தேசிய விருதுகளை வென்றவர். வேரில்லா பூச்சியங்கள், அஷ்ரப் எனும் தீ, கண்ணாடி குளத்து கவிதை, வெட்டு கற்கள், வெயிலில் ஒரு வீரப்பழம், முடக்கத்தான் போன்ற கவிதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். அதேபோன்று அவலக்குரல், கலங்கிய விழிகள், பேரலை, திசை மாறிய பறவை, கந்தலாடை போன்ற குறுந்திரைப்படங்களையும் இயக்கி நடித்து வெளியிட்டுள்ளார்.

# புதிய நிர்வாகிகள் தெரிவு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

தலைவர் நடராஜர் காண்டீபன், துணைத்தலைவர்களாக மா. கணபதிப்பிள்ளை, திருமதி ஜெயந்தி விநோதன், மருத்துவர் தி.ஞானசேகரன், பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, உதவிச் செயலாளர் திருமதி லீலாவதி மோகனசுந்தரம், நிதிச் செயலாளர் செல்லத்துரை திருச்செல்வன், உதவி நிதிச்செயலாளர் கோபாலபிள்ளை பரமானந்தம், நூலகக் குழுச் செயலாளர் திருமதி வசந்தி தயாபரன், இலக்கியக் குழுச் செயலாளர் திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, கல்விக்குழுச் செயலாளர் சண்முகம் இந்திரகுமார், நிலையமைப்புக் குழுச் செயலாளர் மா.தேவராசா, உறுப்புரிமைக் குழுச் செயலாளர் கி. பொன்னுத்துரை, கவின்கலைக் குழுச் செயலாளர் தெட்சணாமூர்த்தி மதுசூதனன் ஆகியோர் தெரிவானர். நிர்வாகக்குழு உறுப்பினர்களாக க. குமரன், கதிரவேலு மகாதேவா, திருமதி பவானி முகுந்தன், திருமதி ஹேமாவதி கபிலதாஸ், வேலுப்பிள்ளை இளஞ்செழியன், கனகசபை சுந்தரேசன், அமிர்தநாயகம் நிக்சன், கதிரு.க.செந்தில்குமாரன், திருமதி வளர்மதி சுமாதரன், ஆ.இரகுபதி பாலசிறீதரன், மருத்துவர் உமாபதி ஸ்ரீசங்கர், ஜி. இராஜகுலேந்திரா, தெ. மதுசூதனன், செ. மனோகரன், ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

# ஜனாதிபதியை நான் உசுப்பேற்றுவதாக மைத்திரிபால பொய் சொல்கிறார்

பா.நிரோஸ்

ஜனாதிபதியை உசுப்பேற்றும் வகையில் நான் எதனையும் கூறவில்லை. முன்னாள் ஜனாதிபதி சபையில் பொய்களைக் கூறி வருகிறார். முன்னாள் ஜனாதிபதி என்றவகையில் பொய்களை கூறுவது நல்லதல்ல என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.



2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நான் சபையில் இல்லாபோது என்னைப் பற்றி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கீழ்த்தரமாக கூறியிருக்கிறார். குழியை ஆழமாக தோண்டும்போது மணம் வரும் என்கிறார். இதனை ஏற்றுகொள்கிறேன். குழியை தோண்ட தோண்ட அர்ஜுன் அலோசியஸின் காசோலைகளும் வரலாம் எனவும் சாடினார்.

ஜனாதிபதியின் செலவீனங்கள் தொடர்பில் நான் தனிப்பட்ட எவரையும் குற்றம்சுமத்தவில்லை. 2019ஆம் ஆண்டு அப்போதிருந்த ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதியும் ஒதுக்கியிருக்கும் செலவினங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது செலவீனங்களுக்கு இடையில் பாரிய வித்தியாசங்கள் இருப்பதாக எனது உரையில் கூறியிருந்தேன்.

தற்போதைய ஜனாதிபதி நாட்டுக்கு செய்திருக்கும் முன்னுதாரணங்களை சுட்டிக்காட்டும் உரிமை எனக்கு இருக்கிறது. யாரையும் தனிப்பட்ட வகையில் தாக்கும் நோக்கம் எனக்கு இல்லை. ஆனால் அடித்தால் நானும் திருப்பியடிப்போம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் மீது தனிப்பட்ட தாக்குதல் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. எனது உருவ பொம்மை, எனது முகத்தை எரித்தாலும், நான் அடுத்த தேர்தலில் தோற்று வீட்டுக்கு சென்றாலும் நான் எடுத்தத் தீர்மானங்களில் உறுதியாக இருப்பேன்.

நான் கூறும் கருத்துகளில் தவறுகள் இருந்தால் அதனை சுட்டிக்காட்டினால் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கிறேன் எனவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

# ஆறாவது முறையாக வான் வழி விதைக் குண்டு வீச்சு

வத்தேகம கெபிளித்த வனப்பகுதியில் 06வது முறையாக வான் வழிமூலம் விதை குண்டு வீச்சு செயற்றிட்டம் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரண தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையில் வன அடர்த்தியை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டமொன்றை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் தலைமையின்கீழ், இலங்கை விமானப்படையினர் இலங்கை வன பாதுகாப்பு திணைக்களம்,பேராதனை பல்கலைக்கழக விவசாயபீடம், மத்திய சுற்றுச்சூழல் ஆணையகம் மற்றும் மாஸ் கெபிடல் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து வத்தேகம, கெபிளித்த வனப்பகுதியில் 06 ஆவது முறையாக வான் வழிமூலம் விதை குண்டு வீச்சு செயற்றிட்டத்தை ஆரம்பித்தனர்.

விமானப்படை கட்டளை வேளாண்மை பிரிவின் கட்டளை அதிகாரி குருப் கேப்டன் ரஜீவ் கொடிப்பிலி, வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் தலைமையில் கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் அமைத்துள்ள வேளாண்மை பிரிவால் இந்த விதைக்குண்டுகள் செய்யப்பட்டன. 2030 ஆம் ஆண்டில் பசுமைக் விரிவாக்கத்தை 27 சதவீதம் முதல் 32 சதவீதமாக உயர்த்துவதன் மூலம் நாட்டின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக இலங்கையின் வன அடர்த்தியை மேம்படுத்தும் நோக்கத்தை அடைவதாகும்.

இதன் முதலாவது செயற்றிட்டமாக ரணுறவ தேசிய வனப் பகுதியின் 5 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 5,000 விதைக்குண்டுகளும் இரண்டாவது கட்டமாக அம்பாறை லகுன வனப்பகுதியில் 67,000 விதைக்குண்டுகளும் 3வது கட்டமாக லகுன தேசிய பூங்காவில் 2020 டிசெம்பர் காலப்பகுதியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் 30,000 விதைக்குண்டுகளும் நான்காவது முறையாக மீண்டும் லகுன தேசிய பூங்காவில் 60 ஏக்கர் நிலப்பரப்பில் 67,000 விதைக்குண்டுகளும் 5 வது முறையாக கெபிளித்த தேசிய வனப்பகுதியில் 75 ஏக்கர் நிலப்பரப்பில் 80,000 விதைக்குண்டுகள் இதுவரை விமானப்படையினால் வான் வழிமூலம் வீசப்பட்டுள்ளன.






# உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கு ஆறுதல் கூறிய ரிஷாட் எம்.பி

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகுப் பாதை விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்

அரசாங்கத்துக்கும் சு.கவுக்கும்

# பிரச்சினை இல்லை

பா.நிரோஸ்

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எந்தவிதமானப் பிரச்சினைகளும் இல்லை என அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான மஹிந்தனந்தவின் குற்றச்சாட்டுகளால் சபையில் ஆத்திரமடைந்த முன்னாள் ஜனாதிபதியை அமைதிப்படுத்தும் நோக்கில், அமைச்சர் தினேஸ் சபையில் நேற்று (25) உரையாற்றியிருந்தார்.

**சுதந்திரக் கட்சிக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் எந்தவிதமானப் பிரச்சினைகளும் இல்லை. பேசுவேன். அவ்வாறான பிரச்சினைகள் எதுவும் உருவாகவில்லை**

**மைத்திரிபால சிறிசேன மீதான மஹிந்தனந்தவின் குற்றச்சாட்டுகளால் ஆத்திரமடைந்த முன்னாள் ஜனாதிபதியை அமைதிப்படுத்தும் நோக்கில், அமைச்சர் தினேஸ் உரையாற்றியிருந்தார்**

பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும்போது, அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அந்த சமயத்தில் சபையில் இருக்க வேண்டும் என அவருக்கு அறிவிக்க வேண்டும். இதுவே பாராளுமன்ற சம்பிரதாயம்.

பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி செலவீனங்கள் தலைப்புக்குக் கீழான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, எந்தவோர் இடத்திலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரை குறிப்பிடவில்லை.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும் அவர் செய்த செலவீனக் குறைப்புகளை அன்று பாராளுமன்றத்தில் பலரும் பேசினார்கள். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் எந்தவிதமானப் பிரச்சினைகளும் இல்லை. இதுதொடர்பில் மஹிந்தானந்தவுடன் நான் பேசுவேன். அரசியல் ரீதியாக கட்சிக்களுக்கிடையான பிரச்சினையாக பார்க்க வேண்டாம். அவ்வாறான பிரச்சினைகள் எதுவும் உருவாகவில்லை எனவும் அமைச்சர் தினேஸ் தெரிவித்தார்.




### விற்பனைக்கு

துண்டு இரும்புகள் மொத்த விற்பனைக்கு உள்ளது. விலைகள் மற்றும் பார்வையிடுவதற்காக அழையுங்கள். 0772291080

### பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டம் தெஹிவளை பிரதேசத்தில் 540-A தெஹிவளை மேற்கு கிராமசேவகர் பிரிவில், இல-29/5/5, கெம்பல் இடம். தெஹிவளை என்ற விலாசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 967571857V எனும் தேசிய அடையாள அட்டைக்கு உரித்துடைய பயாகலகே தொன் ஷாலிகா செவ்வந்தி கருணாரத்ன ஆகிய நான், எனது பெயரை இன்றிலிருந்து பாத்திமா சாலிஹா என மாற்றிக்கொண்டுள்ளேன் என்பதை இலங்கை அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### பொது அறிவித்தல

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர் :** கப்ருக டொட் கொம் லிமிடட்
**கம்பனியின் புதிய பெயர் :** கப்ருக ஹோல்டிங்ஸ் லிமிடட்
**பதிவு அலுவலக முகவரி :** இல: 237/22ஏ, விஜய குமாரதுங்க மாவத்தை, கொழும்பு 05.
**கம்பனியின் இலக்கம் :** PB00247881
**மாற்றம் நிகழ்ந்த திகதி :** 20.11.2021

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) கீழ் கீழ்க்கானும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

பிளடினம் ஏசியா கோர்பரேஷன் (பீவீசி) எல்டீடி
பி வீ 00246550
இல. 361/2, விலமுன, தெல்தெனிய, மெததும்பர.

ஸ்வர்னகலா கோல்ட் லோன் சென்டர் (பீவீசி) எல்டீடி
பி வீ 00248489
இல. 523/1, வைத்தியசாலை வீதி, முல்லேரியாவ புதிய நகரம்.

டொப்ரீச் குளோபல் (பீவீசி) எல்டீடி
பி வீ 00248488
இல. 420/16, 1 வது ஒழுங்கை, மஹாவல வீதி, கிரிபெரிய, பாணதுரை.

சமன்மல் எஸ்டேட் (பீவீசி) எல்டீடி
பி வீ 00240120
இல. 474, "சமன்மல்", தங்கல்ல வீதி, மாத்தறை.

பணிப்பாளர்கள்

திட்டமிடப்படாத அபிவிருத்திகளை விசாரிக்க

# விசாரணைக் குழு அமைக்கவும்

## குறிஞ்சாக்கேணி விவகாரத்தில் சூரா சபை வலியுறுத்தல்

■ ஒலுமுதீன் கியாஸ்

முறையாகத் திட்டமிடப்படாத அபிவிருத்திகளை விசாரிக்க விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென கிண்ணியா சூரா சபை வலியுறுத்தியுள்ளது.

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற படகுப் பாதை விபத்தில் 6 பேர் மரணமடைந்தும் பலர் காயமடைந்தும் இருந்தனர்.

இந்த விபத்து என்பது முறையாகத் திட்டமிடப்படாத ஓர் அபிவிருத்தித் திட்டத்தின் தொடர்ச்சியில் ஏற்பட்ட ஒன்றாகும் என கிண்ணியா சூரா சபையின் தலைவர் ஏ.ஆர்.எம். பரீத் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று (25) அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதாவது: 'இந்த விபத்துத் தொடர்பான காரணங்களை முழுமையாக ஆராய வேண்டும். தற்காலிகப் பாலம் அகற்றப்பட்ட போதும் இந்தப் பாலத்துக்கான திட்ட வரைவுகள் தயாரிக்கும் போதும் மாற்றுப் பாதைகள் குறித்து சிந்தித்து முடிவு எட்டப்பட்டனவா?

இவ்விடயம் தொடர்பில் பல மகஜர்கள் கையளிக்கப்பட்டும், அலட்சியமாக இருந்தவர்கள் யார்? விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் முழுமையான நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

இதற்குக் காரணமானவர்கள்



அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். எமது மக்களுக்கு நீதி வேண்டும்.

எனவே, இது தொடர்பாக உடனடியாக விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கை ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிஞ்சாக்கேணி விபத்து:

## மூவருக்கு விளக்கமறியல்

■ எப்.முபாரக்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணிப் பகுதியில் இடம்பெற்ற படகுப் பாதை விபத்து தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மூவரையும், டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிமன்ற நீதவான் ஐ.பி.ரஸாக் உத்தரவிட்டார்.

மோட்டார் பொருத்தப்பட்ட குறித்த படகுப் பாதையை இயக்கியவர், போக்குவரத்துக்குக் கட்டணம் அறவிடும் நபர், படகுப் பாதையின் உரிமையாளர் ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், பெரிய கிண்ணியா, பெரியாற்றுமுனை, கிண்ணியா ஆகிய பகுதியைச் சேர்ந்த 35, 40, 53 வயதுடையவர்கள் ஆவர்.

குறிஞ்சாக்கேணியில் செவ்வாய்கிழமை (23) மிதப்பு பாதை நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதில், நான்கு சிறுவர்கள் உட்பட 6 பேர் மரணித்ததுடன், 20க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்த கிண்ணியா பொலிஸார், சந்தேகநபர் ஒருவரையும் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இருவரையும் கைது செய்தனர்.

சந்தே நபர்களை, திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் (24) பொலிஸார் ஆஜர்படுத்திய போதே, விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டார்.



### மௌன பிரார்த்தனை...

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்த பாடசாலை மாணவர்கள், பொதுமக்களுக்காக நேற்று (25) மௌன பிரார்த்தனை நடைபெற்றது. வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் இலங்கைதுறைப் பகுதியிலிருந்து இலங்கைதுறை, முகத்துவாரத்துக்கு பாடசாலை மாணவர்கள் பயணிக்கின்ற இழுவைப் பாதை படகு சேவை இடம்பெறும் இடத்திலேயே இப்பிரார்த்தனை நடைபெற்றது. இலங்கைதுறை பிரதேச பகுதி பாடசாலை மாணவர்கள், பெற்றோர் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மௌன பிரார்த்தனையில், வெருகல் பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி கலந்துகொண்டார். இதேவேளை, இலங்கை துறையிலிருந்து இலங்கைதுறை – முகத்துவாரத்துக்கான பாலம் ஒன்று அமைத்துத் தருமாறு, வெருகல் பிரதேச செயலாளரிடம் பிரதேச மக்கள் மகஜரையும் கையளித்தனர். (படப்பிடிப்பு: தீஷான் அஹமட்)





## மஹஓயாவில் ஆகக் கூடிய மழை

■ எம்.எஸ்.எம். ஹனீபா, வி.சுகிர்தகுமார்

அம்பாறை மாவட்டத்தில் நேற்று (25) காலை 08.30 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் மஹஓயா பிரதேசத்தில் ஆகக் கூடிய 83.02 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக, பொத்துவில் வானிலை அவதான நிலைய கண்காணிப்பாளர் எம்.ஏ.எம். அக்மல் தெரிவித்தார்.

ரூபஸ்குளத்தில் 61.05 மில்லிமீற்றர், பாணாமை பிரதேசத்தில் 56.09 மில்லி மீற்றர், லகுகல பிரதேசத்தில் 46.7 மில்லி மீற்றர், தீகவாபி பிரதேசத்தில் 45 மில்லி மீற்றர், அம்பாறை பிரதேசத்தில் 39.3 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 03 நாள்களாக பெய்து வரும் மழையால், அம்பாறை மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதோடு, உள் வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அடிப்படை

## பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முனைப்பு

■ ரீ.கே.றஹ்மத்துல்லா

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தீர்க்கப்படாத பல அடிப்படை பிரச்சினைகள் நீண்டகாலமாக இருந்துவருகின்றன. இதனால் மக்கள் பல்வேறுபட்ட பாதிப்புகளையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இவற்றுக்குத் தீர்வுப் பெற்றுக் கொடுக்கும் வகையில், அரச அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள், விவசாய, மீனவ மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்த கலந்துரையாடலொன்று, அக்கரைப்பற்று தனியார் விடுதியில் நேற்று (25) நடைபெற்றது.

தேசிய மீனவ பேரவையின் அனுசரணையுடன், அம்பாறை மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முதற்கட்ட இக்கலந்துரையாடலில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, பொத்துவில், அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட மக்களின் பிரச்சினைகள், குறைபாடுகள்



தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

காணிப் பிரச்சினைகள், குடிநீர்ப் பிரச்சினைகள், யானைப் பிரச்சினைகள், கடலரிப்பு மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள், வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டன. இது தொடர்பில் மிக விரைவில் உரிய அதிகாரிகள், அரசியல் தலைவர்களின் கவனத்துக்கு கொண்டு சென்று தீர்வுகளை வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைக்கு அருகில் குழி:

# மாணவர்களுக்கு ஆபத்து

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி சிவபாத கலையக பாடசாலைக்கு முன்பாக, பாலம் அமைப்பதற்காக வெட்டப்பட்ட குழி, மாணவர்களுக்கு ஆபத்தாக மாறியுள்ளது.

நேற்று முன்தினம் (24), பெய்த மழை காரணமாக, ஆரம்பப் பிரிவு மாணவர்கள் இருவர் நீர் நிரம்பிய குழிக்குள் வீழ்ந்த நிலையில், ஏனைய மாணவர்களால் காப்பற்றப்பட்டுள்ளதாக, பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், கரைச்சி பிரதேச சபையால், பாலம் ஒன்று





அமைப்பதற்கு, குறித்த பாடசாலைக்கு அருகில் உள்ள வீதியில், சுமார் நான்கு அல்லது ஐந்து அடி ஆழத்தில் குழி வெட்டப்பட்டது.

இந்த நிலையில், தற்போது பெய்து வரும் மழை காரணமாக, குறித்த குழி நிரம்பி நீர் செல்வதனால் ஆழமற்ற குழிக் என கருதிய மாணவர்கள், அதனை கடந்து செல்ல முற்பட்ட போது, தவறி விழுந்துள்ளனர். இதையடுத்து, அதிர்ஷ்டவசமாக ஏனைய உயர்வகுப்பு மாணவர்களால் அவர்கள் காப்பற்றப்பட்டனர் என, ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆபத்தான பகுதி என எந்தவிதமான எச்சரிக்கை சமிஞ்கையும் இல்லாத நிலையில், குறித்த பகுதி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உடையார்கட்டுக்குளம் வான்பாய்கின்றது

■ நடராசா கிருஸ்ணகுமார், சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, உடையார்கட்டுக் குளம் நேற்று முன்தினம் (24) முதல், வான்பாயத் தொடங்கி உள்ளது.

பெய்து வரும் மழை காரணமாகவே, உடையார்கட்டுக்குளம் நிரம்பி வான்பாயத் தொடங்கி உள்ளது.

அதிகரித்த மழை வீழ்ச்சி பதியுமானால், ஏ-35 பரந்தன் - முல்லைத்தீவு வீதியின் மூங்கிலாறு பகுதியில் உள்ள வீதியை மூடி, உடையார்கட்டுக்குளம் வான் பாயும் என, அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், அண்மைய நாள்களாக பெய்து வரும் மழை



காரணமாக, கிளிநொச்சி, இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 30 அடியை அண்மித்துள்ளதுடன், ஏனைய குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்து, வான்பாய ஆரம்பித்துள்ளன.

நேற்று (25) காலை, நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள நிலைவர அறிக்கையின்படி, 26 அடி நீர் கொள்ளவு கொண்ட இரணைமடு குளத்தின் நீர்மட்டம், 29 அடி 8 அங்குலமாக உயர்வடைந்துள்ளது.





## யாழில் சந்திப்பு

■ எம்.றொசாந்த்

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்துக்கான இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்தூர் ராகிம் சிட்டுஹி மற்றும் அவரின் அதிகாரிகள், யாழ். மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனை, நேற்று (25) சந்தித்துள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்த அவர்கள், மரியாதை நிமித்தமான சந்திப்பை மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில், உலக உணவுத்திட்டத்தால் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக உணவுப் பாதுகாப்பு, போசாக்கு குறைபாடு, பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத்திட்டம், ஜீவனோபாயத் திட்டங்கள் என்பவை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்கால திட்டங்கள் பற்றியும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

## 25 ஆடுகளுடன் இருவர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு, சட்டவிரோதமான முறையில் 25 ஆடுகளை ஏற்றிச் சென்ற இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என, கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆடுகள், நேற்று (25), சிறிய வாகனமொன்றில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாகவும், கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து



கொழும்புக்கு ஆடுகள் கொண்டு செல்வது தொடர்பில், கோப்பாய் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது. இதன் அடிப்படையில், நீர்வேலிப் பகுதியில் வைத்து, குறித்த வாகனம் நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது, சட்டவிரோதமான முறையில் ஆடுகளை ஏற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், கெக்கிரிகொல்லாவா பகுதியை சேர்ந்தவர்கள் என, கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிக்க சென்றவர்

## மறுநாள் சடலமாக மீட்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் கிராமத்தில், நேற்று (25) ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மன்னகண்டலை, கெருடமடு பகுதியை சேர்ந்த 65 வயதுடைய அழகன் கோபால்ராஜ் என்பவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் (24) இரவு, வீட்டில் இருந்து மீன்பிடிப்பதற்காக சென்ற குறித்த நபர், வீட்டுக்கு திரும்பி வராத நிலையில், உறவினர்கள் தேடியபோது, காட்டுபகுதியில் அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.



மண்டான் வீதியில்

## விபத்து; இளம் பெண் படுகாயம்

■ எஸ். தில்லைநாதன்

வடமராட்சி, கரணவாய் தெற்கு- மண்டான் வீதியில், நேற்று (25) முற்பகல் 11.30 மணியளவில், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில், இளம்பெண் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

வாதரவத்தை பகுதியைச் சேர்ந்த எஸ்.சிவகலா (வயது -30) என்பவரே, இவ்வாறு படுகாயங்களுக்கு உள்ளானார்.

படுகாயமடைந்தவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில், நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



பறிக்கப்படும் பச்சைக் கொழுந்தில்

# பாதியை தின்னும் தராசு

## இலத்திரனியல் தராசு எமக்கு வேண்டாமென செப்பல்டன் மக்கள் சீற்றம்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்துகளை நிறை பார்ப்பதற்காக தோட்ட நிர்வாகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் தராசில், கொழுந்தின் நிறை குறைவாகக் காட்டப்படுவதாகத் தெரிவித்து, பொகவந்தலாவை- செப்பல்டன் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (25) தாம் பறித்த கொழுந்தை நிறை பார்ப்பதற்காக தோட்ட நிர்வாகத்திடம் வழங்க மறுத்துள்ளனர்.

தாம் பறிக்கும் கொழுந்து நிர்வாகத்தால், இலத்திரனியல் தராசு மூலம் நிறை பார்க்கும் போது, குறைவாக இருப்பதாகவும் சாதாரண தராசில் நிறை பார்க்கும் போது உரிய நிறையுடன் இருப்பதாகவும் செப்பல்டன் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



தோட்ட நிர்வாகத்தால் திட்டமிட்ட முறையிலேயே இந்த மோசடி நடைபெறுவதாகவும் இந்த மோசடியைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாதென தொழிலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த தோட்டத் தொழிலாளர்கள் ஹட்டனிலுள்ள தொழில் ஆணைக்குழு அதிகாரிகளிடம் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய, குறித்த அதிகாரிகள் தோட்ட நிர்வாகத்துடனும் தொழிலாளர்களுடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது இலத்திரனியல் தராசில் தாம் பறிக்கும் கொழுந்துகளை நிறை பார்ப்பதற்கு ஒப்படைக்கமாட்டோம் எனத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில், செப்பல்டன் தோட்ட அதிகாரியொருவரிடம் வினவியபோது, தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளமாக 1,000 ரூபாய் வழங்கப்பட வேண்டும். ஆனால் தோட்டங்கள் நட்டத்தில் செல்கையில் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை வழங்கும் போது, மேலும் நட்டம் ஏற்படுவதாகவும் தெரிவித்த அவர், இதனை ஈடு செய்யவே தொழிலாளர்களை பச்சைத் தேயிலைக் கொழுந்தை பறிக்கவும் அவற்றை இந்த தராசில் நிறை பார்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றார்.

எனவே தோட்டத் தொழிலாளர்கள் கோரும் இலத்திரனியல் தராசு பயன்பாட்டை நிறுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

# அச்சத்தில் மூக்குள்ஓயா

■ நவி

ஹேவாஹெட்ட, ரகத்துங்கொட மூக்குள்ஓயா தோட்ட பகுதியில், நேற்று முன்தினம் (23) இரவு பெய்த கடும் மழை காரணமாக, லயன் குடியிருப்பு ஒன்றின் பின் பகுதியில், மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் குறித்த குடியிருப்பில் உள்ள சமையல் அறை மற்றும் அங்கிருந்த பொருள்களும் சேதமடைந்துள்ளன.



# மழையால் மிளகுச் செய்கை பாதிப்பு

■ இந்திக அருணகுமார



மத்திய மாகாணத்தில் நிலவும் சீரற்ற வானிலையால், மிளகுச் செய்கை பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக மிளகு உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாரியளவில் மிளகுச் செய்கையில் ஈடுபடும் மாத்தளை, இரத்தோட்டை, லக்கல, நாவுல பிரதேச செயலகப் பிரிவுகளில் தற்போது, பெய்து வரும் மழையால் மிளகுச் செய்கை அழிவை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.



கிராமத்திலிருந்து ஆரம்பிப்போம்

# மாத்தளையில் முன்னெடுப்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன

'அழகிய நாடு- வளமான வாழ்க்கை' என்ற தொனிப்பொருளின் கீழ், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஏற்பாடு செய்துள்ள கிராமத்தில் இருந்து ஆரம்பிப்போம் எனும் வேலைத்திட்டமானது, மாத்தளை மாவட்டம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, மக்கள் விடுதலை முன்னணியின் மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கமகெதர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய கிராமத்திலிருந்து ஆரம்பிப்போம் வேலைத்திட்டமானது, மாத்தளை, நாவுல, யட்டவத்த, இரத்தோட்டை, கலேவல, தம்புள்ள உள்ளிட்ட பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது.








# புத்துயிர் பெறும் கல்வி

கொரோனா தொற்று அசாதாரண சூழ்நிலை காரணமாக, கற்றலில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பேரிடர் மேலாண்மைக்கான ஆசியா பசுபிக் அமைப்பினர் முன்னெடுக்கும் (asia pacific alliance for disaster management) 'புத்துயிர் பெறும் கல்வி' செயற்றிட்டத்தின் ஊடாக, பதுளை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பசறை/ கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயம், கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலை, நமுனுகுல/ பிங்கராவ தமிழ் வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பெறுமதிமிக்க கற்றல் வழிகாட்டல் புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. (நடராஜா மலர்வேந்தன்)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான

# காணி உரிமையில் மாற்றமில்லை



பெருந்தோட்ட காணிகளின் உரிமை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கே என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

லுணுகல சோலன்ஸ் தோட்ட காணி விவகாரம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

லுணுகல- சோலன்ஸ் தோட்டத்தில் என்னுடைய வேண்டுகோளின் கீழ், தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த காணியை வெளியாட்களுக்கு சட்டவிரோதமாக பிரித்து கொடுப்பதற்கு, லுணுகல பிரதேச சபை தலைவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை த தடுத்து நிறுத்தப்பட்டது.

விசேடமாக பதுளை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்ட காணிகளை வெளியாட்களுக்கு சட்டவிரோதமான முறையில் பிரித்து கொடுப்பதற்கு தீய சக்திகளினால், அரசியல் அங்கிகாரத்துடன் நாடகங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

எனவே, மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் மலையகப் பெருந்தோட்ட காணிகளை சட்டவிரோதமான முறையில் வெளியாட்கள் அபகரித்துக் கொள்வதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் இடமளிக்கமாட்டேன்.

இத்தகைய காணி அபகரிப்பு செயற்பாடுகளினால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், தங்களுடைய தொழிலை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விமர்சித்து

# பங்காளிகள் ஏமாற்றுகின்றனர்

## பெரியசாமி பிரதீபன் குற்றச்சாட்டு

■ கே.சுந்தரலிங்கம்

அரசாங்கத்துடன் இணைந்துள்ள பங்காளி கட்சிகள், அரசாங்கத்தை விமர்சித்து மக்களையும் அக்கட்சிகளின் ஆதரவாளர்களையும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் ஏமாற்றுகிறார்கள் என, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் மஸ்கெலியா பிரதேச சபையின் உப தவிசாளருமான பெரியசாமி பிரதீபன் குற்றம் சுமத்தியுள்ளார்.

**" அரசாங்கத்தின் உள்ளும் பாராளுமன்றத்திலும் டீல் காரர்கள் காணப்படுவதனால் ஒரு நேர்த்தியான அரசாங்கத்தை உருவாக்க முடியாத ஒரு நிலை காணப்படுகிறது. ஆகவே, எதிர்வரும் காலங்களில் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்**

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஹட்டன் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடன் இணைந்துள்ள விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்ட அனைவரும், அரசாங்கத்தை பலவாறு விமர்சித்துவிட்டு, அரசாங்கத்தை விட்டு விலகப் போகிறோம். அமைச்சுப்பதவிகளை துறக்கப்போகிறோம்




என்றெல்லாம் கூறி விட்டு, கட்சி அங்கத்தவர்கள் மத்தியிலும் அமைப்பாளர்கள் மத்தியிலும் பல்வேறு மாற்றுக்கருத்துகளை கூறி ஒரு மாயயை உருவாக்கி வருகின்றனர்.

இதே போன்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் தலைவர்கள், இப்போது பாராளுமன்றத்திலே வெகுவாக அரசாங்திற்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்து வருகிறார்கள். ஆனால் வாக்களிப்பின் போது ஒரு சிலர் பராளுமன்றத்திற்கு சமூகமளிப்பதில்லை.

ஆகவே, இந்த அரசாங்கத்தில் டீல் வைத்து செயப்படுகிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆகவே அரசாங்கத்தின் உள்ளும் பாராளுமன்றத்திலும் டீல் காரர்கள் காணப்படுவதனால் ஒரு நேர்த்தியான அரசாங்கத்தினை உருவாக்க முடியாத ஒரு நிலை காணப்படுவதாகவும் ஆகவே, எதிர்வரும் காலங்களில் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் என்றார்.

# ஊவாவில் தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகள் அதிகரிப்பு

## குறிவைக்கப்படும் தோட்டத் தலைவர்கள்

■ எம். செல்வராஜா

பெருந்தோட்ட தொழிற்சங்கங்களின் தோட்டத் தலைவர்களை வாயடைக்கும் வகையிலான செயற்பாடுகளை, பெருந்தோட்ட முகாமைத்துவங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பதுளை மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

பதுளை- சென்-ஜேம்ஸ், ரொக்கத்தன்னை, பசறை- கல்லுள்ளை ஆகிய தோட்டங்களில், தோட்டத் தலைவர்களை வாயடைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சென்-ஜேம்ஸ் பெருந்தோட்டத்தில் ஐக்கிய தொழிலாளர் முன்னணி, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களின் இரு தலைவர்களை (தோட்ட தலைவர்கள்) தோட்ட நிர்வாகம் சேவை நீக்கம் செய்தது. இதனை ஆட்சேபித்து அத்தோட்டத்தைச் சேர்ந்த 300 தொழிலாளர்கள் பணிப் பகிஸ்கரிப்பை நேற்று (25) மேற்கொண்டுள்ளனர். தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும்படி, தோட்டத்தலைவர்கள் தோட்ட நிர்வாகத்திடம் வற்புறுத்தியதையடுத்தே, தோட்ட நிர்வாகம், குறிப்பிட்ட தோட்ட தலைவர்களை வேலை நீக்கம் செய்தது.

**" ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து, பதுளை உதவித் தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், தோட்ட நிர்வாகங்கள் மற்றும் தோட்ட தொழிற்சங்கங்களுடன் ஆணையாளர் பேசவுள்ளார்**

இது குறித்து, நேற்று (25) சென்-ஜேம்ஸ் தோட்ட அலுவலகத்தில் தொழிற்சங்க மட்டத்தில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் நிறைவுற்றுள்ளன.

வேலை நீக்கம் செய்த தோட்டத் தலைவர்களை, மீளவும் வேலைக்கு அமர்த்தும் வரையில், தொழிலாளர்கள் பணிப் பகிஸ்கரிப்பினை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இதே போன்றதொரு நிலையே கல்லுள்ளை,ரொக்கத்தன்னை தோட்டங்களிலும் ஏற்பட்டுள்ளது.

இம்மூன்று தோட்டங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து, பதுளை உதவித் தொழில் ஆணையாளருக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகங்கள் மற்றும் தோட்ட தொழிற்சங்கங்களுடன் பதுளை உதவித் தொழில் ஆணையாளர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

டிக்கோயாவில்

# ஓட்டோ விபத்து; ஒருவர் மரணம்

■ எம்.கிருஸ்ணா

டிக்கோயா, மணிக்கவத்தை பகுதியில் ஓட்டோ விபத்துக்கு உள்ளானதில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மணிக்கவத்தையை சேர்ந்த 62 வயதுடைய கே.சுந்தர்ராஜ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஹட்டனிலிருந்து டிக்கோயா, மணிக்கவத்தை பகுதிக்கு சென்ற ஓட்டோ நேற்று முன்தினம் (24) மாலை 6.45 மணியளவில் வீதியை விட்டு விலகி 25 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

ஓட்டோவில் சாரதி உட்பட நால்வர் பயணித்துள்ள நிலையில், ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையில் உயிரிழந்துள்ளர். ஏனைய மூவரும் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# நுகர்வோரின் மனங்களில் கசிவை ஏற்படுத்தி விடாதீர்கள்

சில பொருட்களின் தரங்களைப் பார்க்குமிடத்து, இந்நாட்டில் நுகர்வோர் அதிகார சபையொன்று இருக்கிறதா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. நாளுக்கு நாள், பொருட்களின் விலைகள் ஏறுமுகத்தில் செல்கையில், பொருட்களின் தரம் முகஞ்சுளிக்கச் செய்துவிடுகின்றன.

எப்பொழுது வேண்டுமானாலும் விலைகளில் திருத்தங்களைச் செய்துகொள்ளும் வகையில், விலைப்பட்டியல் கொழுவப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. விலைப்பட்டியல் எவ்வளவுக்கு கட்டாயமோ, அவ்வளவுக்கு அவ்வளவு பொருட்களின் தரமும் முக்கியமென்பதை உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் சிந்திப்பதே இல்லை.

அத்தியாவசியப் பொருட்களுக்கு அப்பால், அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களில் சிலவற்றை, ஆகக்குறைந்தது மாதத்துக்கு ஒருமுறையேனும் கொள்வனவு செய்யவேண்டும். அவற்றின் விலைகளை எளிதில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடிவதே இல்லை. அதேபோல, மாதம் முழுவதும் பயன்படுத்தவேண்டிய சில பொருட்கள் இடைநடுவிலேயே தீர்ந்துவிடுகின்றன.

உதாரணமாக, சவர்க்காரம், பற்பசை, அழகுசாதனப் பொருள்கள் என அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றில் சிலவற்றை, மாதத்துக்கு ஒன்று என, இரண்டு மாதங்களுக்கு இரண்டை பயன்படுத்தியோர், தற்போது, இரண்டு மாதங்களுக்கு மூன்றை பயன்படுத்த வேண்டியவர்களாக உள்ளனர். விலை அதிகரிப்புக்கு ஏற்றவகையில் பொருட்களில் தரமும், கொள்ளளவும் பேணப்படுவதில்லை. இதற்கிடையில், சமையல் எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்துகொள்வதற்காக வரிசையில் காத்திருந்தோர், சிலிண்டரை பயன்படுத்துவதில் அச்சம் கொண்டுள்ளனர். கடந்த இரண்டு வாரங்களாக, பல இடங்களிலும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில், உயிர்ச்சேதங்கள், காயங்கள் ஏற்படாதபோதிலும், வீடுகளுக்கும் பொருட்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால், சிலிண்டர் மீதான சந்தேகம், மக்கள் மனங்களில் கசிந்துள்ளது.

சமையல் எரிவாயுவின் கலவையில் ஏற்பட்ட வேறுபாடுகள் காரணமாகவே, சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அக்குற்றச்சாட்டுகளை காஸ் நிறுவனங்கள் மறுத்துவிட்டன. அப்படியாயின் என்றுமில்லாத வகையில், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பதற்கான காரணத்தை உடனடியாகக் கண்டறிந்து, மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தைக் களையவேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளால், சமையலறைக்கு ஏன் போகின்றோமென குடும்பத்தலைவிகள் நினைத்திருப்பார்கள். ஆனால், சமையல் எரிவாயு சிலிண்டரின் மீதான அச்சத்தால், அப்பக்கமே தலைவைத்துப் படுக்கமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, எவ்விதமான அனுமதியுமின்றி, சமையல் எரிவாயுவின் கலவையில், நிறுவனங்கள் மாற்றங்களைச் செய்துள்ளனவென அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்டுள்ளதாக, செய்திகள் வெளியாகியிருந்த போதிலும், அத்திணைக்களம் அச்செய்தியை மறுத்துவிட்டது. இலங்கை ஒரு வெப்பமண்டல நாடாக இருப்பதால், வாயு கலவையில் குறைந்த சதவீத புரோபேன் மற்றும் அதிக சதவீத பியூட்டேன் இருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் ஏன் வெடிக்கின்றன? அதற்கான காரணத்தைக் கண்டறிந்து, சந்தேகக் கசிவைப் போக்கவேண்டியது பொறுப்பாகும்.


தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒருவருக்கோ அல்லது பலம் பொருந்திய ஒருசாராருக்கோ, மட்டுமே உரியதல்ல நீதி. அது, உலகம் முழுமைக்குமான சத்தியமானது.

நீதியில் இருந்து இந்த உலகம் தவறினால், முழுப் பிரபஞ்சமுமே சிலிர்த்து எழும். இது, உலகை இயக்கும் சக்தியின் ஆக்ரோசமாகும்.

நினைத்தனை எல்லாம், விருப்பப்படி செய்யமுடியாது. நீதியற்ற எதுவும் நிலைப்பதில்லை. சகல மக்களும் ஐக்கியமாக, ஆணவ முனைப்பின்றி, அச்சமின்றி வாழவேண்டும். எந்த உயிரையும் நோகவிட முடியாது. பாவவினைகள் பற்றி இன்னமும் அனேகர் புரியாமல் இருக்கின்றார்கள்.

தனிமனிதனின் சித்தம் குழம்பினால், மொத்தமாகவே அவர் மாறிவிடுகின்றார். என்றும் பரிசுத்த நிலையில் வைத்திருக்க வேண்டிய மகாசொத்து அறிவாகும்.

நேரிய சிந்தனைகள், ஆத்மாவுக்கு நிம்மதியூட்டும். தீயதை நினைப்பது பாவச் சுமைகளை உருவாக்கிவிடும். சின்னப் பிழையென எண்ணி, அதைச் செய்யக்கூடாது. நியாயம் மிகுந்த வாழ்வு, அனுதினமும் சந்தோசமான உணர்வையூட்டும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# விவசாயிகள் மீது தொடரும் போர்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையிலும் இந்தியாவிலும், கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வஞ்சிக்கப்பட்ட ஒரு சமூகமாக, விவசாயிகள் இருந்து வருகிறார்கள்.

இந்தியாவில் மோடி தலைமையிலான அரசாங்கம், வேளாண் சட்டங்களை அறிமுகப்படுத்தி, விவசாயிகளுக்கு மிகப் பாரிய நெருக்கடிகளைக் கொடுத்தது.

அதேவேளை, இலங்கையில் இரசாயன உரங்களைத் தடை செய்வதற்கான எதிர்பாராத அறிவிப்பு, இலங்கை விவசாயிகள் மீது இடியாக இறங்கியது.

இவை இரண்டும், தனித்தனி நிகழ்வுகள் அல்ல; மூன்றாம் உலக நாடுகள் எங்கும், விவசாயத்தை நவீன மயமாக்குவது என்பதன் பேரால், விவசாயிகளையும் விவசாய நிலங்களையும் கையகப்படுத்தும் பல்தேசியக் கம்பனிகளின் மிகப் பாரிய திட்டமிடலின் ஒரு பகுதியாகவே, இவற்றைக் காண வேண்டியுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஓராண்டுக்கு முன்னர் அறிவித்த வேளாண் சட்டங்களை, அண்மையில் மீளப்பெறுவதாக அறிவித்தார்.

இலங்கையில், உரங்கள் மீது விதிக்கப்பட்ட தடையை, சில தினங்களுக்கு முன்னர் இலங்கை அரசாங்கம் நீக்கி இருக்கிறது. அதுவும் முழுவதுமாக இல்லாமல், இரசாயன உரத்தை தனியார் இறக்குமதி செய்வதற்கு அனுமதித்திருக்கின்றது.

இவ்விரண்டும் தற்காலிக ஆறுதல்கள். இங்கு கவனிக்க வேண்டிய இரண்டு விடயங்கள் உண்டு.

முதலாவது, அரசாங்கத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிரான சிறு போராட்டங்கள், எதுவரை சாத்தியமாகும்? அரசுகள் தன்கொடுங்கரங்களால் எதிர்ப்புக் குரல்களை அடக்குகையில், எவ்வாறு வினையாற்றுவது?

இரண்டாவது, விவசாயிகள் தொடர்ச்சியாகக் குறிவைக்கப்படுவது ஏன்?

அநீதிகளுக்கு எதிரான, பல்வேறு எழுந்தமான சிறு போராட்டங்களை, இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் கடந்த இரு தசாப்தங்களிலும் கண்டிருக்கின்றோம்.

சில போராட்டங்கள், குறிப்பான பிரச்சினைகளைப் பற்றியவை. பொலிஸ் அடாவடித்தனம் போன்ற உள்ளூர் பிரச்சினைகள் முதலாகக் கொத்தலாவல தனியார் பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிர்ப்பு, ஆசிரியர்களின் சம்பளச் சீர்திருத்தக் கோரிக்கை போன்ற தேசிய அளவிலான, ஆனால் வரையறுக்கப்பட்ட போராட்டங்கள் சிறிய வெற்றிகளைப் பெற்றுள்ளன.

எனினும், அரசாங்கம் மாற்று வழிகளில் தன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக் காத்திருக்கின்றது. இந்த அரசாங்கம் போனால், அடுத்து வரும் அரசாங்கமொன்றும் அதையே தான் செய்யும்.

ஏனெனில், அவையெல்லாம் ஒரு பெரிய நிகழ்ச்சிநிரலின் பகுதிகள். அந்த நிகழ்ச்சிநிரல், உலகமயமாக்கலின் ஒரு பகுதியாக, ஏகாதிபத்தியத்தின் பல்வேறு கரங்களால் முன்னெடுக்கப்படுவதாகும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்குவது என்பதும் அதற்காக இலவச மருத்துவத்தையும் கல்வியையும் தாரை வார்ப்பது என்பதும் இதன் பகுதிகளேயாகும்.

அதேவேளை, வேறு சில போராட்டங்கள் மிகுந்த வன்முறையைக் கொண்டு அடக்கப்பட்டுள்ளன; அல்லது, அடக்கப்பட்டு வருகின்றன. சிலகாலத்துக்கு முன்னர், தனியார் பல்கலைக்கழக முறைக்கு எதிரான மாணவர்களின் போராட்டம், அவற்றில் முக்கியமானது.

எனினும், நம் கவனத்துக்குரியது எதுவென்றால், கல்வியினதும் மருத்துவத்தினதும் தனியார் மயமாக்கல், 1978ஆம் ஆண்டின் திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் சேர்த்து, திட்டமிட்ட முறையில் படிப்படியாக வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளது என்பதாகும்.

ஒருபுறம், தனியார் துறையின் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகள் சிறிதுசிறிதாகக் கட்டி எழுப்பப்படுகையில், கல்வி, மருத்துவத் துறைகளில் அரசாங்கத்தின் வழிகாட்டலும் அரசாங்கத்தின் நேரடியான நெறிப்படுத்தலும் இல்லாமல், தனியார் அமைப்புகள் பரவலாக நடவடிக்கைகளை உருவாகின்றன. (டியூட்டரிகள், தனிப்பட்ட மருத்துவ ஆலோசனைகள், மருத்துவ பரிசோதனை மையங்கள் போன்றன சில உதாரணங்கள்)

இவற்றை இயலுமாக்குகின்ற விதத்தில், பாடசாலைக் கல்வியின் தரம் கீழிறங்குவதும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்குப் போதியளவில் இடங்கள் இல்லாமையும், அரச மருத்துவ சேவை பலவீனமடைந்து போவதும் திட்டமிட்டே மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரே நேரத்தில் பலரையும் பாதிக்கும் ஒரு காரியம் நடக்கும்போது, பலரையும் அணிதிரட்டிப் போராட வாய்ப்பு அதிகம். அதேவேளை, மறைவாக ஒரு திட்டத்தின் தனித்தனி அம்சங்கள் நிறைவேற்றப்படுகின்றபோது, அவை பெரும்பாலும் கண்களுக்குத் தெரிவதில்லை. அவற்றின் ஒட்டுமொத்தமான விளைவுகள் தெரியவருகின்ற போது, காலம் கடந்து விடுகின்றது.

அமெரிக்காவை விட்டால், முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் குறிப்பாக, இரண்டு உலகப் போர்களாலும் பாதிக்கப்பட்ட நாடுகளில் கல்வி, மருத்துவம், போக்குவரத்து உட்பட பல பொதுச் சேவைகளும் அரசின் கட்டுப்பாட்டிலேயே இன்னும் இருந்து வருகின்றன. அல்லது, தனியார் மயமாக்கல்களின் பின்பும், அரசின் கண்காணிப்புக்கு உட்பட்டவையாகத் தொடர்கின்றன. தனியார் மயமாக்கலுக்கு எதிரான மக்களின் செயற்பாடுகள் காரணமாகவே, முழுமையான தனியார் மயமாக்கல் அங்கு இயலுமாகவில்லை.

எனினும், பொதுச் சேவைகளின் சுமையை, மக்கள் மீது திணிக்கும் முயற்சியை, பெருமுதலாளித்துவம் பலவாறாகவும் தொடர்கின்றது.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளின் முன்னேற்றம், தனியார் கல்வியினதும் மருத்துவத்தினதும் பிற சேவைகளினதும் வளர்ச்சியால் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் இடையிலான உறவு என்னவென்றும் அடிப்படை என்னவென்றும் விளங்காமல், போராட்டங்கள் தனித்தனியாக முன்னெடுக்கப்படுகின்ற போது அவை பலவீனப்படுகின்றன. அதைவிட, அவை வெறுமனவே குறிப்பான சில கோரிக்கைகளுடன் நின்றுவிடுகின்ற போது அவற்றின் வெற்றி, களைகள், பூண்டுகளின் வேர்களைக் களையாமல், தண்டுப் பகுதிகளை முறித்தெடுப்பது போலாகிவிடுகின்றது.

எனவேதான், சிறு போராட்டங்கள் என்பன, அடிப்படையான பிரச்சினை பற்றிய புரிதலுடன் மேற்கொள்ளப்படாது, தனித்தனியாக முன்னெடுக்கப்படுகின்றபோது அவை பலவீனமடைவது போக, அவற்றின் வெற்றிகளின் பயனை, நீண்ட காலத்தில் உறுதிப்படுத்த இயலாது போகின்றது.

எனவே, நீதிக்கான போராட்டங்கள் தமது உடனடி ஆதரவுத் தளத்துக்கு வெளியே, பிரசார வேலைகளை முன்னெடுப்பதும் வெற்றி தோல்விகளுக்கு அப்பால் போராட்டங்களின் காரணம் முதலாக நடைமுறை அனுபவங்களும் விளைவுகளும் எதிர்காலமும் பற்றி ஆராய்வதும் தொடர்ந்தும் விழிப்புடன் இருப்பதும் முக்கியமாகின்றது.

இந்த இடத்தில், அமைப்பு ரீதியான செயற்பாடு அடிப்படையானது ஆகின்றது. எந்த வகையிலான அமைப்பு என்பதுதான், போராட்டங்களுக்கு எந்த வகையிலான எதிர்காலப் பயன்கள் உள்ளன என்பதை முடிவு செய்யும்.

சிறு போராட்டங்கள், சிறு துளிகளாகச் சிதறிப் போகாமல் பெருவெள்ளமாக மாறி, அனைத்து அநீதிகளையும் அடித்துச்செல்ல வேண்டுமானால், அது ஸ்தாபன ரீதியான நெறிப்படுத்தலின் கீழேயே இயலுமாகும். இந்திய விவசாயிகளின் போராட்ட செய்தி சொல்வதும் அதையே ஆகும்.

இங்கு, இந்திய விவசாயிகளின் போராட்டம் குறித்து சில முக்கியமான விடயங்களை அடிக்கோடிட வேண்டியுள்ளது. கடந்த ஓராண்டுக்கு மேலாக, விவசாயிகள் இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் கடுங்குளிரையும் பொருட்படுத்தாது போராடி வருகிறார்கள்.

இந்திய அரசின் திட்டமிட்டுக் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறையின் விளைவால், 750க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர். போராடுகிற விவசாயிகளுக்கு எதிராக, இந்திய மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் தொடர்ச்சியாக வழக்குகளைப் பதிவுசெய்து துன்புறுத்துகின்றன. ஆனால், இந்திய விவசாயிகளின் மனந்தளராத நெடிய போராட்டம் வெற்றி அளித்துள்ளது.

ஆனால், இது இத்துடன் முடிந்துவிடவில்லை. இது, அடுத்தாண்டு நடக்கவுள்ள பஞ்சாப், உத்திரப் பிரதேசம் ஆகியவற்றின் மாநிலங்கள் அவைக்கான தேர்தலை நோக்காகக் கொண்டவை என்பது வெளிப்படையான இரகசியம்.

சீக்கியர்களின் வழிகாட்டியான குர்நானக்கின் பிறந்த நாளன்றே, நரேந்திர மோடி இவ்வேளாண் சட்டங்களை மீளப்பெறுவதாக அறிவித்தார். இலங்கையிலும் அதுவே நடந்தது.

இன்று பல்தேசியக் கம்பெனிகள், விவசாயத்தைக் குறிவைத்துள்ளன. நிலையானதும் தொடர்ச்சியானதுமான இலாபம் தரும் தொழிலாக, விவசாயம் இருக்கிறது என்பதையும் மனிதகுலம் இருக்கும் வரை விவசாயம் தவிர்க்க இயலாதது என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

விவசாயத்தை முழுமையாகக் கையகப்படுத்துவதன் ஊடு, உற்பத்திகளின் விலையை நிர்ணயிக்கவும் விவசாயிகளைக் குறைந்த கூலிக்கு தினக்கூலிகளாகப் பயன்படுத்தவும் முடியும் என்பதையும் அவர்கள் நன்கறிவார்கள். இவையனைத்தும் கொள்ளை இலாபம் பார்க்கும் வழிமுறைகள் என்பது புதிதல்ல.

விவசாயம் உழைக்கும் மக்களின் உயிர்நாடி. விவசாயம் இல்லாமல் போவதை நாம் அனுமதித்தால், என்ன நடக்கும் என்பதை இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை ஏற்றம், மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

## கடிதங்கள்

### ஆற்றுவாழை தாக்கம்; மீனவர்கள் பாதிப்பு

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் கனமழையின் காரணமாக, மாவட்டத்தின் கழிமுகப் பகுதிகளாகக் காணப்படும் ஆற்றுமுகங்களில் 'சல்வீனியா' எனப்படும் ஆற்றுவாளை பெரிதும் இன்னல்களை ஏற்படுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆலையடிவேம்பு, தில்லையாற்றுப்பாலம் , பெரியகளப்பு, அட்டாளைச்சேனை, கோணாவத்தை ஆறு, காரைதீவு கழிமுகம், தம்பட்டை கழிமுகம் போன்ற பகுதி மீனவர்கள், மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் பெரிதும் இன்னல்களைச் சந்திக்க நேரிட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதிகளில், தற்பொழுது வீசி வரும் பலத்த காற்று மற்றும் சல்வீனியா தாவரத்தின் பரவல் காரணமாக, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு, படகு மூலம் போக்குவரத்தை மேற்கொள்ளுவதற்கு மிகவும் சிரமத்தை எதிர்கொள்ளுவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, மீனவர்களது மீன்பிடி கூடைகளும் வலைகளும் வாவியில் சிக்கிக்கொள்வதாகவும் இதனால் மீன்பிடி நடவடிக்கைகளின் போது அதிகளவிலான அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும் முதலைகளின் அச்சுறுத்தல்களுக்கும் அவ்வப்போது முகங்கொடுக்க நேரிடுவதாகவும் பாதிக்கப்படும் மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே, அதிகாரிகள் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும், குறித்த வாவியைச் சுத்தம் செய்து தருமாறும் மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

என். ஹரன்



# லங்கா SSL இனால் முட் கம்பி (barbed wire) அறிமுகம்

லங்கா ஸ்பெஷல் ஸ்டீல் லிமிடெட் (லங்கா SSL), இலங்கையின் ஒரே SLS சான்றிதழ் பெற்ற முட்கம்பிகளை (barbed wire) அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. அதனூடாக இலங்கையில் SLS சான்றிதழ் பெற்ற ஒரே கல்வனைஸ் செய்யப்பட்ட கம்பிகள் (Gi) உற்பத்தியின் முன்னோடி எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்துள்ளது.

தரம் மற்றும் புத்தாக்கம் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் நிறுவனம், பல்வேறு ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து முன்னெடுத்திருந்த விஞ்ஞானபூர்வ ஆய்வினூடாக, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் துருப்பிடிக்கும் வீதங்களை கவனத்தில் கொண்டு, கல்வனைஸ் செய்யப்பட்ட கம்பிகளின் (Gi) ஆயுள் காலம் 25 வருடங்களை விட அதிகமானதாக அமைந்திருக்கும் என்பது கண்டறியப்பட்டிருந்தது.

ISO 9001: 2015, ISO 45001:2018 சான்றிதழ்கள் பெற்ற லங்கா SSL கம்பனி, நாட்டின் கல்வனைஸ் செய்யப்பட்ட கம்பிகள் உற்பத்திப் பிரிவில் முன்னோடியாகத் திகழ்வதுடன், மூன்று தசாப்த காலமாக வாடிக்கையாளர்கள் மத்தியில் தொடர்ச்சியாக நன்மதிப்பையும் வென்றுள்ளது.

**ஒப்பற்ற சேவைகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கு மார்ச் மாதத்தில், CNCI Achiever விருதுகள் 2020 இல் மிகப் பெரிய பிரிவில் தேசிய தங்க விருதும் சிறந்த பத்து நிறுவனங்களில் ஒன்றுக்கான விருதும் வழங்கப்பட்டிருந்தது**

உலகின் சிறந்த வர்த்தக நாமங்களுக்கு நிகரானதாக இந்நிறுவனத்தின் உற்பத்திகள் அமைந்திருப்பதுடன், சபுகஸ்கந்த பகுதியில் அமைந்துள்ள நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலையினால் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.




**ISO 9001: 2015, ISO 45001:2018 சான்றிதழைப் பெற்ற லங்கா SSL கம்பனி, கல்வனைஸ் செய்யப்பட்ட கம்பிகள் உற்பத்திப் பிரிவில் முன்னோடியாகத் திகழ்வதுடன், மூன்று தசாப்த காலமாக வாடிக்கையாளர்கள் மத்தியில் தொடர்ச்சியாக நன்மதிப்பையும் வென்றுள்ளது**

நிறுவனத்தின் Gi கம்பிகளுக்கு SLS 139:2003 தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் முட் கம்பிகளுக்கும் SLS 31:1988 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

லங்கா SSL இன் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான பிரவீன் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "கல்வனைஸ் செய்யப்பட்ட முட்கம்பிகள் தொழிற்றுறையில் முன்னோடி எனும் வகையில், 25 வருடங்களாக லங்கா SSL தொழிற்துறையை மேம்படுத்தும் பணிகளை முன்னெடுத்துள்ளதுடன், அதற்கமைய தனது தயாரிப்புகளின் தர நியமங்களையும் மேம்படுத்தி உயர் தரம் வாய்ந்த தயாரிப்புகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளது. நாட்டில் SLS-31 சான்றிதழைப் பெற்ற ஒரே முட்கம்பிகளாக எமது முட்கம்பிகள் காணப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்தருகின்றோம். எமது பிரிவுகள் மற்றும் சந்தைகளை மேம்படுத்துவது தொடர்பில் நாம் கவனம் செலுத்துவதுடன், தரம், புத்தாக்கம் மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றுக்கு முன்னுரிமையளித்து எமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றோம்" என்றார்.

எதிர்வரும் மாதங்களில் நிறுவனம் தனது தயாரிப்புகளை விரிவாக்கம் செய்யத் திட்டமிட்டுள்ளது. கடந்த ஆண்டில் TATA Steel லிமிடெட்டின் சர்வதேச கம்பிகள் பிரிவுடனான பங்காண்மையை வலிமைப்படுத்தியிருந்தது. அதனூடாக நாடு முழுவதிலும் தரமான கம்பிகள் விநியோகத்தில் நீண்ட காலமாக பேணியிருந்த ஏக முகவர் மற்றும் விநியோகத்தருக்கான அந்தஸ்தை தொடர்ந்தும் தக்க வைத்திருந்தது.

மேலும், லங்கா SSL இனால் 'Permaweld' வர்த்தக நாமத்திலமைந்த வெல்டிங் கம்பிகள் சகல வெல்டிங் பயன்பாட்டுக்கும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. நாடு முழுவதிலும் லக்சபான பற்றரிஸ் பிஎல்சியின் ஹார்ட்வெயார் விநியோக பிரிவினூடாக விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒப்பற்ற சேவைகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கு கௌரவிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் மார்ச் மாதத்தில், நிறுவனத்துக்கு CNCI Achiever விருதுகள் 2020 இல் மிகப் பெரிய பிரிவில் (உற்பத்தித் துறை) தேசிய தங்க விருது வழங்கப்பட்டதுடன், தொழிற்றுறை சிறப்புக்கான சிறந்த பத்து நிறுவனங்களில் ஒன்றுக்கான விருதும் வழங்கப்பட்டிருந்தது.

# செலான் வங்கி, STAREMIT உடன் கைகோர்ப்பு

செலான் வங்கி, தென் கொரியாவின் STAREMIT உடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, தென் கொரியாவில் வசிக்கும் இலங்கையர்களுக்கு சௌகரியமாக உடனுக்குடன் இலங்கைக்கு பணத்தை அனுப்பும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்கு ஆதரவளிக்க வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசிக்கும் பல இலங்கையர்கள் பணத்தை அனுப்ப முன்வந்துள்ள நிலையில், இந்த பங்காண்மை தொடர்பான அறிவித்தலை செலான் வங்கி வெளியிட்டுள்ளது. செலான் வங்கியின் அர்ப்பணிப்பான பண அனுப்பல் வாய்ப்பினூடாக, நாட்டினுள் பணத்தை அனுப்புவது பாதுகாப்பானதாகவும் சகாயமானதாகவும் அமைந்துள்ளது.

தென் கொரியாவில் வசிக்கும் இலங்கையர்கள் STAREMIT app ஐ பயன்படுத்தி ஸ்மார்ட் சாதனம் ஒன்றினூடாக 24/7 நேரமும் கொடுக்கல் வாங்கல்களை சௌகரியமாக மேற்கொள்ள முடியும். செலான் வங்கியினூடாக பணத்தை அனுப்பும் போது, 2021 நவம்பர் 30 ஆம் திகதி வரை எந்தத் தரப்பினராலும் எந்தவிதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது. பணத்தை அனுப்புபவர்களுக்கு போட்டிகரமான நாணயமாற்று விகிதங்களின் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், அனுப்பும் ஒவ்வொரு



டொலருக்கும் மேலதிகமாக 2 ரூபாயை பெற்றுக் கொள்ளும் வசதியும் வழங்கப்படுகின்றது. உடனடியாக பணப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் என்பதுடன், இலங்கையிலுள்ள வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்படும்.

செலான் வங்கியின் செயற்பாடுகளுக்கான பிரதி பொது முகாமையாளர் மலிக் விக்ரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டுக்கு அந்நியச் செலாவணி வருகை மிகவும் பெறுமதி வாய்ந்ததாக அமைந்திருக்கும் காலகட்டத்தில், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு இலங்கைக்கான தமது வெளிநாட்டு பண அனுப்புகைகளை மேற்கொள்வதற்கு சௌகரியமான மற்றும் சகாயமான தெரிவுகளை வழங்குவதையிட்டு செலான் வங்கி பெருமை கொள்கின்றது. STAREMIT உடனான பங்காண்மையின் மூலமாக, தென் கொரியாவில் வசிக்கும் பெருமளவான இலங்கையர்களுக்கு பாதுகாப்பான முறையில் தமது பணத்தை இலங்கையிலுள்ள

**தென் கொரியாவில் வசிக்கும் இலங்கையர்கள் STAREMIT app ஐ பயன்படுத்தி, 24/7 நேரமும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம். செலான் வங்கி ஊடாக பணத்தை அனுப்பும் போது, 2021 நவம்பர் 30 ஆம் திகதி வரை எந்தத் தரப்பினராலும் எந்தவிதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது**

தமது அன்புக்குரியவர்களுக்கு அனுப்புவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அன்புடன் அரவணைக்கும் வங்கி எனும் வகையில், உலகளாவிய ரீதியில் காணப்படும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் நாம் எமது தந்திரோபாய பங்காண்மைகளை தொடர்ந்தும் கட்டியெழுப்பி, எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவோம்" என்றார்.

செலான் வங்கியின் உறுதியான சர்வதேச பண அனுப்பல் பங்காளர்கள் வரிசையில் STAREMIT இணைந்துள்ளது. இதனூடாக வெளிநாட்டில் வசிக்கும் மற்றும் பணியாற்றும் இலங்கையர்களுக்கு சௌகரியமான முறையில் பணத்தை அனுப்பும் வசதியை வங்கி ஏற்படுத்திக் கொடுக்கின்றது. வாடிக்கையாளர்களை மையப்படுத்திய வங்கி எனும் வகையில், வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் இலங்கையிலுள்ள அவர்களின் அன்புக்குரியவர்கள் தொடர்பில் செலான் வங்கி கவனம் செலுத்தி, அவர்களின் கொடுக்கல் வாங்கல்களுக்கு பல்வேறு அனுகூலங்களை சேர்த்துள்ளது.

புதுடெல்லி

# இந்திய அரசியலில் மாற்றம்

### சுப்ரமணியசுவாமி முதலமைச்சர் மம்தா சந்திப்பு

மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியை, பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் சுப்ரமணியசுவாமி நேற்றுமுன்தினம் மாலை புதுடெல்லியில் சந்தித்து பேசியுள்ளனர்.

இது குறித்து பாரதிய ஜனதா கட்சி மூத்த தலைவர் சுப்ரமணியசுவாமி கூறியதாவது: "நான் சந்தித்த, இணைந்து பணியாற்றிய தலைவர்களில் ஜெயபிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய், ராஜீவ், சந்திரசேகர், நரசிம்ம ராவ் போன்ற சிலர் மட்டுமே சொன்னதை செய்யும் செய்வதைச் சொல்லும் குணம் உடையவர்களாக இருந்தனர். அந்த வரிசையில் மம்தாவும் இடம் பெற்றுள்ளார். இந்திய அரசியலில் இது மிக அரிய குணம்" என்று சுப்ரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசியுள்ளார். அதன்பின், செய்தியாளர்களிடம் மம்தா பானர்ஜி கூறியதாவது:

"மேற்கு வங்கத்தில் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள சர்வதேச வர்த்தக மாநாட்டில் பங்கேற்குமாறு பிரதமருக்கு அழைப்பு விடுத்தேன். திரிபுராவில் நடந்த வன்முறையில், பா.ஜ.க தொண்டர்களால் திரிணமுல் காங்கிரஸ் தொண்டர்கள் தாக்கப்பட்டது குறித்து முறையிட்டேன். மேற்கு வங்கத்தில் எல்லை பாதுகாப்பு படையினரின் அதிகார வரம்பு நீடிக்கப்பட்டுள்ள உத்தரவை திரும்பப் பெற வலியுறுத்தினேன். நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பு குலைக்கப்படக் கூடாது என்று அவரிடம் வேண்டுகோள் விடுத்தேன்" எனத் தெரிவித்தார்.



புதுடெல்லி



## 2026ஆம் ஆண்டில்

# தமிழகத்தில் பா.ஜ.க ஆட்சி மலரும்

2026ஆம் ஆண்டு தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்யுமென்று மாநில பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.


திருப்பூர் பா.ஜ.க மாவட்ட அலுவலகத் திறப்பு விழா திருப்பூர் விஜயாபுரம் பகுதியில் நடைபெற்றது. இதில் கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா நேரில் பங்கேற்றார். தொடர்ந்து, திருப்பூர் கட்சி அலுவலகத்தைத் திறந்தவர், திருநெல்வேலி, திருப்பத்தூர், ஈரோடு ஆகிய மாவட்ட அலுவலகங்களைக் காணொளிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை பேசும்போது, "பா.ஜ.கவில் 18 கோடி பேர் உறுப்பினர்களாக உள்ளோம். பா.ஜ.கவால் கண்டெடுக்கப்பட்டு, ஒவ்வொரு நிலையாக உயர்ந்து, இன்றைக்கு மத்திய அமைச்சராக எல். முருகன் உள்ளார். நயினார் நாகேந்திரன் அ.தி.மு.கவை விட்டுவிட்டு, இன்றைக்கு பா.ஜ.கவில் சேர்ந்து பா.ஜ.கவில் சட்டப்பேரவைக் குழுத் தலைவராக உள்ளார்.

பா.ஜ.கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்றால், மாவட்டந்தோறும் அலுவலகங்கள் அமைய வேண்டும். 2026ஆம் ஆண்டு தமிழகத்தில் பா.ஜ.க ஆட்சி மலரும். அனைத்துத் தேர்தல்களிலும் பா.ஜ.க வெற்றி பெற, இந்த அலுவலகக் கட்டடங்கள் நமக்குப் பயன்படும்" என்றார்.

புதுடெல்லி

# தமிழக அரசாங்கத்தின் அரசாணைக்கு கண்டனம்



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும், 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடுகின்றனர். இதேபோல், இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் விடுதலையாகவே முடியாதவாறு புதிய அரசாணை பிறப்பித்து இருக்கும் தமிழக அரசாங்கத்துக்குக் கண்டனம் தெரிவிப்பதாக, அம்மா மக்கள் முன்னேற் கட்சி பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் நேற்று (25) ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

'பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும், 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இனி விடுதலையாகவே முடியாதவாறு புதிய அரசாணை பிறப்பித்து இருக்கும் தமிழக அரசாங்கத்துக்குக் கண்டனம் தெரிவிக்கிறேன். தமிழக அரசாங்கம் தன்னிடமுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி 7 தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும். எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது இதுகுறித்துப் பேசிய ஸ்டாலின், ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகியும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை' என்று பதிவிட்டுள்ளார்.

புதுடெல்லி

# கறுப்புப் பணம் ரூ. 400 கோடி சிக்கியது

புதுடெல்லியின் 'ரியல் எஸ்டேட்' நிறுவனங்களில் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில், 400 கோடி ரூபாய் கறுப்பு பணம் சிக்கி உள்ளது.

இது குறித்து மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் நேற்றுமுன்தினத்துக்குரிய அறிக்கையின்படி புதுடெல்லியில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி விற்பனை செய்யும் இரு 'ரியல் எஸ்டேட்' நிறுவனங்கள், வருமானத்தை மறைத்து முறைகேடுகளில் ஈடுபடுவதாக இரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் அந்நிறுவனங்களின் அலுவலகங்களில் சமீபத்தில் சோதனை நடத்தப்பட்டது. சிக்கிய ஆவணங்களின் அடிப்படையில், வீடுகள் விற்பனை வாயிலாக பெறும் தொகையின் ஒரு பகுதியை ரொக்கமாக வாங்குவதும், அதை கணக்கில்



காண்பிக்காமல் மோசடி செய்வதும் உறுதியானது.

அதேபோல், போலி நிறுவனங்கள் பெயரில் ஆவணங்கள் தயாரித்து வருமானத்தை மறைத்துள்ளதுடன், செலவு கணக்குகளையும் மோசடியாக பராமரித்துள்ளனர். இந்த வகையில், இரு நிறுவனங்களும் 400 கோடி ரூபாய் வரை கறுப்புப் பணமாக பெற்றுள்ளனர். அவர்களிடம் இருந்து 10 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் விசாரணை தொடர்கிறதென தெரிவிக்கப்படுகிறது.

அமராவதி

### சந்திரபாபுவின் குடும்பத்தை விமர்சித்தோருக்கு


# தொலைபேசியில் மர்ம நபர்கள் மிரட்டல்

### பாதுகாப்பு அதிகரிப்பு

ஆந்திர சட்டப்பேரவையில் முன்னாள் முதலமைச்சரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு மற்றும் அவரது குடும்பத்தை, அமைச்சர் நானி மற்றும் ஆளும் கட்சியான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் வம்சி, அம்பாட்டி ராம்பாபு, சந்திரசேகர் ரெட்டி ஆகியோர் அவதூறாக பேசியதாக குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு உள்ளது.

அதன்பின் நானி உள்ளிட்ட 4 பேர் மீதும் தெலுங்கு தேசம் கட்சியினர் சரமாரியாக விமர்சித்து வருகின்றனர்.

என்டிஆர் குடும்பத்தினரும் இவர்களை வன்மையாக கண்டித்தனர். மேலும், நடிகர்கள் பாலகிருஷ்ணா, ஜூனியர் என்டிஆர், நாரா ரோஹித், நடிகர் சிரஞ்சீவியின் சகோதரரும் நடிகருமான நாகேந்திர பாபு ஆகியோரும் கண்டித்தனர். இந்தக் காரணத்தால், பொது விநியோகத் துறை அமைச்சர் உட்பட மேற்கூறிய 3 எம்எல்ஏக்களுக்கு தொலைபேசியில் மர்ம நபர்கள் மிரட்டல் விடுத்து வருகின்றனர். இதையடுத்து, இவர்கள் 4 பேருக்கும் நேற்றுமுன்தினம் முதல் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழகம்

### முன்னாள் எம்.எல்.ஏ பா.ஜ.கவில் இணைவு

# அ.தி.மு.கவினருக்கு கடும் அதிர்ச்சி

பெரும்பாலும் கூட்டணிக் கட்சியில் இருந்து யாராவது விலகி வந்தால், அவரை மற்ற கட்சிகள் சேர்க்கத் தயங்குவர். தற்போது இதற்கு நேர் மாறாக, அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினர் வழிகாட்டிக் குழு உறுப்பினரும், முன்னாள் எம்.எல்.ஏவுமான மாணிக்கம், நேற்று பாரதிய ஜனதாவில் இணைந்தார். இது, அ.தி.மு.வினரிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பா.ஜ.கவில் இணைந்த மாணிக்கம், அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வத்தின் தீவிர ஆதரவாளர். அவர் தர்ம யுத்தம் தொடங்கியபோது, அவரிடம் வந்து சேர்ந்த முதல் எம்.எல்.ஏ இவர் தான். அவரை கட்சியின் வழிகாட்டி குழு உறுப்பினராக பன்னீர்செல்வம் நியமித்தார். அனைத்தையும் துறந்து, அவர் பா.ஜ.கவில் இணைந்துள்ளார். அவரை இணைத்தது தவறு எனக் கூற முடியாமல், அ.தி.மு.க விழிப் பிதுங்கி நிற்கிறது.

கூட்டணிக்கு தலைமை தாங்கும் கட்சி நிர்வாகியை, கூட்டணியிலுள்ள கட்சி இழுப்பது எந்த வகையில் நியாயம்? இதைக் கண்டிக்க வேண்டாமா? இவரைப் பின்பற்றி மற்றவர்களும் சென்றால் கட்சி என்னாவது என, அ.தி.மு.க நிர்வாகிகள் குரல் எழுப்புகின்றனர். ஆனால், கட்சி தலைமையோ முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறது.

முதலாவது டெஸ்டில்

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்திய இலங்கை




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்டை இலங்கை வென்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள், என்குருமஹ் பொன்னர், ஜோஷுவா டா சில்வாவின் இணைப்பாட்டத்தில் இனிங்ஸை நகர்த்தியது.

எனினும், 54 ஓட்டங்களுடன் லசித் எம்புல்தெனியவிடம் டா சில்வா வீழ்ந்ததோடு, தொடர்ந்து வந்த ரஹீம் கொர்ன்வோல் குறிப்பிட்ட நேரத்தில் பிரவீன் ஜெயவிக்கிரமவிடம் வீழ்ந்திருந்தார்.

பின்னர் வந்த ஜோமெல் வொரிக்கான், ஷனொன் கப்ரியலும் லசித் எம்புல்தெனியவிடம் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்களையே பெற்ற மேற்கிந்தியத் தீவுகள், 187 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. என்குருமஹ் பொன்னர் 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இந்நிலையில், இப்போட்டியின் நாயகனாக இலங்கையணித் தலைவர் திமுத் கருணாரத்ன தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 386/10 (துடுப்பாட்டம்: திமுத் கருணாரத்ன 147, தனஞ்சய டி சில்வா 61, பதும் நிஸங்க 56, தினேஷ் சந்திமால் 45 ஓட்டங்கள். பந்துவீச்சு: றொஸ்டன் சேஸ் 5/83, ஜோமெல் வொரிக்கான் 3/87, ஷனொன் கப்ரியல் 2/69)

மேற்கிந்தியத் தீவுகள்: 230/10 (துடுப்பாட்டம்: கைல் மேயர்ஸ் 45, கிரேய்க் பிறத்வெய்ட் 41, ரஹீம் கொர்ன்வோல் 39, ஜேஸன் ஹோல்டர் 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரவீன் ஜெயவிக்கிரம 4/40, ரமேஷ் மென்டிஸ் 3/75, சுரங்க லக்மால் 1/10, தனஞ்சய டி சில்வா 1/11, லசித் எம்புல்தெனிய 1/67)

இலங்கை: 191/4 (திமுத் கருணாரத்ன 83, அஞ்சலோ மத்தியூஸ் ஆ.இ 69 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோமெல் வொரிக்கான் 2/42, ரஹீம் கொர்ன்வோல் 2/60)

மேற்கிந்தியத் தீவுகள்: 160/10 (துடுப்பாட்டம்: என்குருமஹ் பொன்னர் ஆ.இ 68, ஜோஷுவா டா சில்வா 54 ஓட்டங்கள். பந்துவீச்சு: லசித் எம்புல்தெனிய 5/46, ரமேஷ் மென்டிஸ் 4/64, பிரவீன் ஜெயவிக்கிரம 1/28)

# சம்பியன்ஸ் லீக்: வெளியேற்றப்பட்ட டொட்மூண்ட்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் வெளியேற்றப்பட்டுள்ளது.

போர்த்துக்கல் கழகமான ஸ்போர்ட்டிங்கின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான குழு சி போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் டொட்டமுண்ட் தோல்வியடைந்ததையடுத்தே தொடரிலிருந்து வெளியேற்றப்பட, ஸ்போர்ட்டிங் இறுதி 16 அணிகளுக்கிடையிலான விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. ஸ்போர்டிங்க் சார்பாக, பெட்ரோ கொன்கல்வேஸ் இரண்டு கோல்களையும், பெட்ரோ பொரோ ஒரு கோலையும் பெற்றதோடு, டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை டொன்யெல் மலென் பெற்றிருந்தார்.

இந்நிலையில், மோல்டோவாக் கழகமான ஷெரிஃப்பின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான குழு டி போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்ற ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட், விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. மட்றிட் சார்பாக, டேவிட் அலபா, டொனி க்றூஸ், கரிம் பென்ஸீமா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இதேவேளை, ஸ்பானியக் கழகமான அத்லெட்டிகோ மட்றிட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான குழு பி போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலன் வென்றது. மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜுனியர் மெஸ்ஸியாஸ் பெற்றிந்தார்.

இந்நிலையில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான குழு ஏ போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் தோற்றிருந்தது. பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிலியான் மப்பே பெற்றதோடு, சிற்றி சார்பாக ரஹீம் ஸ்டேர்லிங்க், கப்ரியல் ஜெஸூஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில்

# முன்னிலையில் இந்தியா



நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் கான்பூரில் நேற்று ஆரம்பமான நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் பதில் தலைவர் அஜின்கியா ரஹானே, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இந்திய அணி சார்பாக ஷ்ரேயாஸ் ஐயரும், நியூசிலாந்து சார்பாக றஷின் றவீந்திராவும் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தனர்.

முதலில் களமிறங்கிய இந்தியா, குறிப்பிட்ட நேரத்திலேயே ஆரம்பத் துடுப்பாட்டவீரர் மாயங்க் அகர்வாலை கைல் ஜேமிஸனிடம் இழந்தது. தொடர்ந்து ஷுப்மன் கில்லும், செட்டேஸ்வர் புஜாராவும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 52 ஓட்டங்களுடன் ஜேமிஸனிடம் கில் வீழ்ந்தார். தொடர்ந்து குறிப்பிட்ட நேரத்தில் 26 ஓட்டங்களுடன் புஜாராவும் டிம் செளதியிடம் வீழ்ந்தார்.

பின்னர் ஓரளவு நேரத்தின் பின்னர் ரஹானேயும் 35 ஓட்டங்களுடன் ஜேமிஸனிடம் விழ இந்தியாவின் நிலை கேள்விக்குறியாக இருந்தது.

எவ்வாறாயினும், அடுத்து வந்த ஐயர், இரவீந்திர ஜடேஜாவின் இணைப்பாட்டத்தில் பலமான நிலையில் நேற்றைய முதல் நாள் முடிவில், 4 விக்கெட்டுகளை இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 258 ஓட்டங்களைப் பெற்றவாறு இந்தியா காணப்படுகின்றது.

தற்போது களத்தில், ஐயர் 75, ஜடேஜா 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது காணப்படுகின்றனர்.

கல்முனை பிரதேச இளைஞர் விளையாட்டு விழாவில்

# சம்பியனான கல்முனை தேசிய இளைஞர் கழகம்

■ எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனை பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கான பிரதேச இளைஞர் விளையாட்டு போட்டி நற்பிட்டிமுனை அஷ்ரப் விளையாட்டு மைதானத்தில் (2021/11/21 ) அண்மையில் நடைபெற்றது.

இவ் விளையாட்டு போட்டிகளில் மெய்வல்லுநர் போட்டி குழு நிகழ்ச்சிகளில் ஒட்டுமொத்த



அதிகூடிய பதக்கங்களை பெற்று கல்முனை தேசிய இளைஞர் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

ஈக்வடோர்

# சிறைக் கலவரத்தில் 300 பேர் உயிரிழப்பு



மத்திய அமெரிக்க நாடான ஈக்வடோரில் இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்து இதுவரை, சிறைச்சாலைகளில் இடம்பெற்ற கலவரங்களில் 300 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி அன்று குயாக்வாலி சிறைச்சாலையில் நடந்த மோதலில் 116 கைதிகளும், கடந்த 15 ஆம் திகதி கயாமி சிறையில் 70 கைதிகளும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிலிப்பைன்ஸ்




# செல்பி எடுக்க முயன்றதால் விபரீதம்



பொம்மை முதலை என நினைத்து செல்பி எடுக்க முயன்ற நபரை முதலையொன்று தாக்கிய சம்பவம் பிலிப்பைன்ஸில் இடம்பெற்றுள்ளது.

நெஹிமியாஸ் சிப்பாடா என அழைக்கப்படும் குறித்த நபர் தனது 68ஆவது பிறந்த நாளைக் கொண்டாட அண்மையில் ககாயன் என்ற இடத்தில் உள்ள கேளிக்கைப் பூங்காவிற்குச் சென்றுள்ளார்.

அங்கு 12 அடி நீளத்திற்கு இருந்த முதலையைக் கண்ட அவர், அது பொம்மை என நினைத்து அது இருந்த குழிக்குள் இறங்கி செல்பி எடுக்க முயற்சி செய்துள்ளார்.

இதன் போது எதிர்பாராதவிதமாக அந்த முதலை நெஹிமியாசின் கையைக் கௌவிப் பிடித்துக் கொண்டது. அப்போதுதான் உண்மையான முதலையிடம் சிக்கிக் கொண்ட விஷயம் அவருக்குத் தெரிய வந்துள்ளது.

எனினும் மனம் தளராத அவர் முதலையிடமிருந்து ஒருவாறு தன்னை விடுவித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# விண்கல்லை திசை திருப்பும் செயற்கைக்கோள்

பூமிக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய விண்கற்களை, அவற்றின் சுற்றுவட்டப்பாதையிலிருந்து திசை திருப்புவதற்கான செயற்கைக்கோள் ஒன்றை நாசா விண்வெளி ஆய்வு மையம் விண்ணில் செலுத்தியுள்ளது.

தற்போது பூமிக்கு உடனடியாக எந்த விண்கல்லினாலும் ஆபத்து இல்லை என்றாலும், எதிர்காலத்தில் அத்தகைய அபாயம் ஏற்படும் நிலையில், அந்தக் கற்களிலிருந்து பூமியைக் காப்பதற்கான இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக, விண்கல் ஒன்றின் மீது வேண்டுமென்றே மோதி அதன் சுற்றுவட்டப் பாதையை மாற்றுவதற்காக செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் நாசா விண்ணில் செலுத்தியுள்ளது.

2,500 அடி விட்டம் கொண்ட 'டிடிமாஸ்' என்ற விண்கல்லைச் சுற்றி வரும் 'டிமார்ஃபாஸ்' என்ற குட்டி நிலவு விண்கல்லைக் குறிவைத்து அந்த செயற்கைக்கோள் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த விண்கற்களால் பூமிக்கு எந்த ஆபத்து இல்லையென்றாலும், எதிர்காலத்தில் வரக் கூடிய அத்தகைய அபாயங்களை எதிர்கொள்வதற்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்காக இந்த ஆய்வை மேற்கொள்வதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



சீனா

# 19ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்த மூதாட்டி



83 வயதான மூதாட்டியொருவர் 19 ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்து உயிர்பிழைத்த சம்பவம் சீனாவில் இடம் பெற்றுள்ளது.

சீனாவில் யாங்சூவில் உள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பொன்றில் வசித்து வரும் குறித்த மூதாட்டி சம்பவ தினத்தன்று பல்கனியில் ஆடைகளை உலரவைத்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. இதன்போது எதிர்பாராத விதமாக பல்கனியில் இருந்து தவறி விழுந்த அவர் 17 ஆவது மாடியில் இருந்த துணிகள் உலரவைக்கப்படும் கயிற்றில் மாட்டிக் கொண்டார்.

இதனையடுத்து உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புப் படை வீரர்கள், மூதாட்டியை காயம் எதுவும் இன்றி பத்திரமாக மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து வெளியான வீடியோவொன்றும் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுவீடன்

பதவியேற்ற சிலமணி நேரங்களில்

# இராஜினாமா செய்த பிரதமர்



ஸ்வீடனில் முதல் பெண் பிரதமராகக் கடந்த 24 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட மக்டலேனா அண்டர்சன், பதவியேற்ற சில மணி நேரங்களிலேயே பதவி விலகிய சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் சுவீடன் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் முன்னாள் பிரதமர் ஸ்டெஃபான் லோஃப்வென் தோல்வியடையவே அவருக்கு பதிலாக, கட்சித் தலைவராக நிதியமைச்சர் மக்டலேனா அண்டர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து, அவரைப் பிரதமராகத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவு புதன்கிழமை நடைபெற்றது.

குறித்த வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற மக்டலேனா நாட்டின் முதல் பெண் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். எனினும் சுவீடன் நாடாளுமன்றத்தில் மாக்டெலனா அண்டர்சன் தாக்கல் செய்த வரவு செலவுத் திட்டத்தை கூட்டணி கட்சியான கிரீன்ஸ் பார்ட்டி வலது சாரி கொள்கைகள் உடைய எதிர்கட்சியான சுவீடன் ஜனநாயக கட்சியுடன் இணைந்து நிராகரித்தது.

இதையடுத்து தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்த மாக்டெலனா ஒற்றை தலைமை கொண்ட ஆட்சியை வழிநடத்த விரும்புவதாக தெரிவித்தார்.

பிரதமரின் விலகல் முடிவை அடுத்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசித்து அடுத்த கட்ட முடிவுகள் எடுக்கப்படும் என சபாநாயகர் *Andreas Norlen* தெரிவித்துள்ளார்.

சோமாலியா

# சோமாலியாவில் குண்டுவெடிப்பு; 5 பேர் உயிரிழப்பு

சோமாலியாவில் மொகடிஷுவில் உள்ள ஒரு பாடசாலை அருகே நேற்றைய தினம் (25) பயங்கரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஐவர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இக் குண்டுவெடிப்பில் 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலுக்கு அல்கொய்தாவுடன் இணைந்த அல்-ஷபாப் அமைப்பு பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 26 நவம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.